# விஷ்வவாணி
# சமர்ப்பண்

Vol. 37 - Issue 5 | May 2024 | Rs. 10/-







## கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷம்
## நடுகிறவர் யார்? நீர்ப்பாய்ச்சுகிறவர் யார்?
## விளையச் செய்கிறவர் யார்?

May
2024

# விஷ்வவாணி சமர்ப்பண்

விஷ்வவாணி சமர்ப்பண் பத்திரிகை தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி, ஹிந்தி, ஒரியா, பெங்காலி, ஆங்கிலம், காக்பொராக், சோரா ஆகிய 12 மொழிகளில் பிரதி மாதமும் வெளியிடப்படுகின்றது. ஆண்டு சந்தா ரூ. 100/-.

**பதிப்பு அலுவலகம்**
1-10-28/247, ஆனந்தபுரம், குஷாய்குடா,
E.C.I.L. P.O, ஹைதராபாத் - 500062
✆040-27125557.
E-mail: samarpan@vishwavani.org

**நிர்வாக அலுவலகம்**
20, ராகுல் தெரு, TMP நகர், புதூர்,
அம்பத்தூர், சென்னை – 600053
✆044-26869200
E-mail: vishwavaninet@vishwavani.org

## பருகப்போவது

2......சிந்தனைக்கு
3......நிர்வாக இயக்குநரிடமிருந்து
7......சிறப்புக் கட்டுரை
11....ஓர் பிரார்த்தனை
12....அன்பின் பகிர்வுகள்
14 ...சின்னச் சின்ன உணர்வுகள்
17....2023-24ல் 85 புதிய ஆலயங்கள்
22 ...ஜெப ஒருங்கிணைப்பு இயக்குநர் கடிதம்
25 ...பணித்தளச் செய்திகள்
34 ...நடப்புச் செய்திகள்

## எமில் அண்ணனின் சிந்தனை வரிகள்

- ஊழியம் என்றால்
  கைகளில் வேதமே,
  ஊழியக்காரர் என்றால்
  வாயில் இயேசுவே!
- குனியாமல் நடுவது இல்லை,
  பணியாமல் பணிபுரிவதும் இல்லை!
- சம்பளம் கருதி நடுகிறார்கள்
  என்றால் ஸ்தாபனம்,
  சன்மானம் கருதாமல் நடுகிறார்கள்
  என்றால் இயக்கம்!
- ஊழியக்காரன்
  சாயங்கள் பூசியவரோ
  அல்லது
  இயேசுவின் காயங்களைக் கண்டவரோ
  என்பதை காலம் காட்டிவிடும்!
- கேட்டுக் கேட்டுக் கொடுத்தால் பிச்சை,
  கேட்காமலே கொடுத்தால் காணிக்கை!
- வசனத்தை விதைத்தால்
  சபை எழும்பும்,
  வார்த்தைகளை வளர்த்தால்
  பகை எழும்பும்!
- இரக்கம் இல்லாதவர்
  நடுவது இல்லை,
  மன உருக்கம் இல்லாதவர்
  தண்ணீர் விடுவதும் இல்லை!
- நீர்ப்பாய்ச்சல் இல்லையென்றால்
  பயிர் கருகும்,
  கண்ணீர் இல்லையென்றால்
  பணி கருகும்!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையின் சுவிசேஷம்
இந்தியக் கிராமங்களை ஆசீர்வதிப்பதைக் காண்பதே விஷ்வவாணியின் தரிசனம்!



# நிர்வாக இயக்குநரின் மடல்!

பிரியமானவர்களே, எல்லாவற்றையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாய் விளையச்செய்கிற கர்த்தரின் நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.

### உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்:

நான் இந்த மடலை உங்களுக்கு எழுதத் துவங்கியபோது, உங்கள் யாவருடைய கிறிஸ்துவுக்குள்ளான அன்பையும், பிரயாசங்களையும், உதாரத்துவ ஈகைகளையும் மிகவும் சந்தோஷத்துடன் பிலிப்பியர் 1:2-6ன்படி நினைவுகூர்ந்தேன். கர்த்தர் உங்கள் குடும்பத்தாரை மேன்மேலும் ஆசீர்வதிக்கவும், தேர்வுகள் எழுதி மேல் வகுப்புகளுக்குச் செல்ல ஆயத்தப்படும் உங்களது பிள்ளைகளின் எதிர்காலம் ஒளிமயமாக அமையவும், திருமணம், குழந்தைப் பாக்கியம் என மங்கள வாழ்வை எதிர்நோக்கி யுள்ள வாலிபப் பிள்ளைகளின் குடும்ப வாழ்வு செழித்தோங்கவும், ஏற்ற வேலை வாய்ப்பு, பதவி உயர்வுகளையும் எதிர்பார்த்திருக்கும் இச்சமயத்தில் தேவ கரத்தி லிருந்து கிருபையாய் அவர்களுக்கு அருளப்படவும், குடும்ப உறுப்பினர்கள் யாவரும் நற்சுகத்தோடும் பெலத்தோடும் காணப்படவும், குடும்பத் தலைவரின் வருமானம் போதுமானதாகவும், கர்த்தரே குடும்பத்தை நேர்த்தியாக நடத்துகிறார், நான் தாழ்ச்சியடையேன் என்கிற விசுவாசத்துடன் முன்செல்லவும், கடுமையான உஷ்ண நாட்களில் உங்கள் குடும்பத்தாரையும், நமது ஊழியர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் பாதுகாக்கவேண்டும் என்கிற ஜெபத்துடன் எழுதுகிறேன். எப்பொழுதும் எல்லாவற்றிலும் நீங்கள் 'திருப்தியாய்' வாழக் கர்த்தர் கிருபைசெய்வாராக.

### பெலப்படுத்தும் கிறிஸ்து:

இந்த நிதியாண்டின் துவக்கத்தில் பிராந்தியவாரியாக முன்னேற்றப்பணி ஊழியர்கள் ஒன்றுகூடி பிலிப்பியர் 4:13ஐ மையமாகக் கொண்டு வேத தியானம் செய்யவும், ஜெபிக்கவும், பணியின் பொருளாதார இலக்குகளைச் சரிவரத் திட்டமிடவும் வழிநடத்திய தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். இந்நிதியாண்டின் இலக்காக இயேசுவை அறியாத 7000 கிராமங்களில் சுவிசேஷ தீபம் ஏற்றிடவேண்டும். அபிவிருத்திப் பணியில் ஓர் பிரதிநிதியாக, முன்னேற்றப்பணி ஊழியராக நீங்கள் வீடுவீடாக விசுவாசக் குடும்பத்தாரைச் சந்தித்துப் பெற்றுத்தரும் ஜெபங்கள், பொருளாதாரம் மூலம் பணித்தளத்தில் நமது மிஷனெரிகள் கிராமம் கிராமமாக வீடுகள்தோறும் சுவிசேஷ தீபம் ஏற்றுவார்கள். சத்துருவின் பிடியில் உள்ளவர்கள் மீட்கப்படுவார்கள். அறியாமை எனும் இருள்விலகி, மெய் ஒளி எங்கும் பிரகாசிக்கும். எங்கும் மகிழ்ச்சியும், சுபிட்சமும் நிரம்பி வழியும். பாவத்திலிருந்து மனந்திரும்பும் மக்களின் பெயர்கள் பரலோகப் பதிவேட்டில் இடம்பெறுவதுடன், உங்களுக்கும் நித்திய கனம் உண்டாகும்.

### மிஷனெரிப் பணி வளர்ச்சியின் ஆதாரம் கர்த்தரே:

ஒரு மிஷனெரிப் பணியின் செயல் இயக்கத்துக்கும் வளர்ச்சிக்கும் முழு காரணர் 'பரிசுத்த ஆவியானவரே' என்றால் அது மிகையாகாது. எந்த மனிதனும் அதற்கான புகழ் அல்லது தகுதிக்குரிய பாராட்டைப் பெற தகுதியற்றவரே. கர்த்தர் அவனவனுக்கு அருளளித்தபடியே மற்றவர்கள் கர்த்தரை விசுவாசிப்பதற்கு ஏதுவாயிருந்த ஊழியக் காரரே என 1கொரி. 3:5 தெரிவிக்கிறது. எனவே முக்கியத்துவம் வேலையாட்களுகல்ல, மாறாக விளைச்சலை வர்த்திக்கச் செய்யும் அறுவடையின் எஜமானனாகிய தேவாதி தேவனுக்கே என 3:6-7ம் வசனங்களில் பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். நாம் தேவனுக்கு 'உடன் வேலையாட்களே' என்பதை (3:9) மறந்துவிடக்கூடாது.

1) பல வகையான ஊழியம் (Diversity of mission)

ஒன்றுக்கொன்று மாறுபட்ட தன்மையுடைய ஊழியம் உண்டு என்பதை இயேசு மத்தேயு 13:1-9ல் சுட்டிக்காட்டுகிறார். பரி. பவுல் எபேசு திருச்சபைக்கு கடிதம் எழுதும் போதும் 4:11-13ல் ஐந்து விதமான ஊழியங்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். வேலையாள் ஒருவன் மண்ணைச் சமன்படுத்துகிறான், மற்றொருவன் விதை விதைக்கிறான், மற்றவன் நீர்ப்பாய்ச்சுகிறான், இருந்தாலும் தேவனே அபரிவிதமாக விளையச் செய்கிறார். பரிசுத்த பவுல் திருச்சபையைப் பல்வேறு பாகங்களைக் கொண்ட உடலுடன் ஒப்பிடும்போது, பன்முகத்தன்மையின் முக்கியத்துவம் காணப்படுகிறது.

விஷ்வவாணி பணியிலும் நாம் பன்முகத் தன்மையுடைய ஊழியப் பணிகளை நிறைவேற்றினாலும், நமது தரிசனம் - கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையின் சுவிசேஷம் இந்தியக் கிராமங்களை ஆசீர்வதிப்பதைக் காண்பதேயாகும்.

2) நோக்கத்தின் ஒற்றுமை (Unity of purpose)

ஒருவன் கர்த்தருக்கு என்ன ஊழியம் செய்தாலும், அவன் இன்னும் ஆத்தும அறுவடைப் பணியின் ஒரு பகுதியாகவே இருக்கிறான் என்பதைக் கட்டாயம் நினைவிற் கொள்ளவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலும், அப்பொல்லோவும், பேதுருவும் ஊழியத்தில் ஒருவருடன் ஒருவர் போட்டியிடவில்லை. மாறாக, ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட பணியைச் செய்து நிறைவேற்றினர். ஊழியத்தில் பன்முகத் தன்மை இருந்தாலும், நோக்கத்தில் ஒற்றுமையுள்ளது (1 கொரி. 3:7-10) மற்றும் ஆவியின் ஒற்றுமையும் இருந்தது.

விஷ்வவாணியின் 9 துறைகளின் ஊழியர்கள், ஜெபக்குழுத் தலைவர்கள், தன்னார்வப் பிரதிநிதிகளும் 'ஒரே நோக்கத்திற்காக' பலவிதமான ஊழியப் பொறுப்புகள் பெற்று இணைந்து நிறைவேற்றி வருகிறோம். பன்முக திருச்சபைகள், மிஷனெரி சங்கங்கள், சுயாதீன ஊழியத் தலைவர்களோடு பரஸ்பர ஐக்கியம் - ஏற்ற புரிதல்களுடன் இயேசுவின் சுவிசேஷப் பிரபல்யத்தில் ஏகமாய் செயலாற்றுகிறோம்.

3) ஆவியில் தாழ்மை (Humility in Spirit)

சுவிசேஷப் பிரபல்யத்தில் 'மனித முயற்சிகள்' தவறல்ல, ஆனால் தேவனே விளையச் செய்கிறார் என்பதை ஏற்க மறப்போர் அல்லது மறுப்போர் 'பெருமை' கொள்கின்றனர். கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய 'மகிமையை' மனிதர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது. அவனவனது வேலைக்குத் தக்கவாறு கூலியைப் பெறுவர். மனிதர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது முக்கியமல்ல; கர்த்தர் நம்மைப் பார்த்து உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே என்று பாராட்டமுடியுமா என்பதே மிக முக்கியம்!

விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத் தக்கதாக, நித்திய ஜீவனாகிய பலனைப் பெறுவான் (யோவான் 4:36). எனவே, அப்பிரயோஜனமான ஊழியக்காரர் நாங்கள், செய்யவேண்டிய கடமையை மாத்திரமே செய்தோம் (லூக்கா 17:10) என மனத்தாழ்மையுடன் அறிக்கையிடவேண்டும். "கிறிஸ்து பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்" என்கிற யோவான் ஸ்நானகனின் மனப்பான்மை வேண்டும் (யோவான் 3:30). நாங்கள் நட்டாலும் நீங்கள் நீர்ப்பாய்ச்சினாலும் மகத்தான மகசூல் அருளுவது அறுவடையின் எஜமான் இயேசு கிறிஸ்துவே!

**தரிசனச் செயலாக்கப்பணியில் கரங்கொடுங்கள்:**

1) தன்னார்வப் பிரதிநிதியாக, ஜெபக்குழுப் பொறுப்பாளராக:

1. ஜெபம், வேத வசனம், ஆத்தும ஆதாயம் என்பதை கிறிஸ்தவ வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவர்கள் தேவை.

2. இனம், ஜாதி, சபை, ஸ்தாபனம் பாராமல், கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கி ஏவப்பட்டவர்களாக ஊழியத்தில் ஈடுபடுவது அவசியம்.

3. இணைந்து ஜெபிப்பதிலும், உங்கள் பகுதி பணிப்பங்காளர்களைச் சந்தித்து சேமிப்புப் பெட்டி மற்றும் மிஷனெரி ஆதரவுக் காணிக்கைகளைச் சேகரித்தும், உரிய இரசீது வழங்கியும், அவர்தம் ஆவிக்குரிய தேவையில் ஆலோசனை வழங்கியும் இப்பணியைத் தன்னார்வமாக நிறைவேற்றலாம்.

4. தன்னார்வ சேவையில் கைம்மாறு கருதாது தரிசனச் செயலாக்கப் பணியில் முழு மனதுடன் கரங்கோர்க்கும் ஆண்கள், பெண்கள் யாவரையும் வரவேற்கிறோம்.

2) பணிப் பங்காளராக:

1. விஷ்வவாணி சேமிப்புப் பெட்டி ஒன்றை இலவசமாகப் பெற்று, அநுதின ஜெபத்துடன் கூடிய உங்கள் தியாகக் காணிக்கையை, ஆறு மாதத்திற்கு ஒருமுறை செலுத்துகிறவராக இப்பணியில் இணைதல்.

2. விஷ்வவாணி சமர்ப்பண் மாத இதழின் வருட சந்தாவாக ரூ. 100/- கொடுத்து இப்பத்திரிகைப் பணியை ஆதரிக்கிறவராக...

3. சுவிசேஷம் ஒருமுறைகூட எட்டியிராத ஒரு கிராம நற்செய்திப்பணிக்கு ரூ.4000/- கொடுத்து, சுவிசேஷப் பிரபல்யத்தில் பங்குபெறுகிறவராக...

4. வட இந்தியப் பணித்தள ஆலயக் கட்டுமானப் பணிகளுக்கு உதாரத்துவமாகக் கொடுப்பவராக, பணித்தளச் சார்பு தேவைகளைச் சந்திக்கிறவராக...

5. புதிய விசுவாசக் குடும்பத்தாரை இப்பணியில் இணைந்து செயல்படவும் கொடுக்கவும் ஊக்கப்படுத்துபவராக நீங்கள் உதவிசெய்யலாம்

3) முழுநேர அபிவிருத்திப் பணியாளராக:

1. இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்று, முழுநேர ஊழிய அழைப்பு பெற்ற 30 வயதிற்கு மிகாமல், 12ம் வகுப்பாவது தேர்ச்சியடைந்தவராக, ஊழியத்தை உண்மையுடனும், உத்தமத்துடனும் செய்ய விரும்பும் வாலிபர்கள் தேவை.

2. சுவிசேஷம் ஒருமுறைகூட எட்டியிராத கிராமங்களுக்குச் சுதேச ஊழியர்கள் மூலம் இந்தியத் திருச்சபையினரின் ஜெபம், ஈகைதனைப் பெற்று, இயேசுவை ஒருமுறைகூட அறிந்திராத கிராமங்களில் "ஆலயமணி" ஒலிக்கச் செய்வதையே தரிசனமாகக் கொண்டவர்கள்.

3. கூட்டு முயற்சியில் ஈடுபட ஆர்வமுடையவராகவும், கடும் பிரயாசங்கள் மேற்கொள்வதின் மூலம், மிஷனெரிப் பணியில் ஆத்துமக் கனிகளைப் பெருகச் செய்பவராகவும் இருத்தல் அவசியம்.

4. சக ஊழியர்களுடனும், பிரதிநிதிகள் மற்றும் பணிப் பங்காளர்களுடனும், திருச்சபை தலைவர்களுடன் உள்ள உறவுகளை நல்ல முறையில் காத்துக் கொள்ளுதல் அவசியம். மேலும் தர்ம சகாயமான காணிக்கை பணத்தை மன உத்தமத்துடன் சேகரித்து தகுந்த அறிக்கையுடன் சமர்ப்பித்தல்.

4) மிஷனெரி தரிசனத் திருச்சபையாக:

1. சபை ஆராதனைகளில் 'மிஷனெரிப் பணி' குறித்த பகிர்வுக்கு வாய்ப்பளித்தல்.

2. இளைஞர்களைத் திருப்பணிகளில் ஈடுபடத் தூண்டும் 'வட இந்தியப் பணித்தள' விஜயத்திற்கான ஊக்கமளித்தல்.

3. மிஷனெரிப் பணிக்காக பாரத்துடன் ஜெபித்து, மாதாந்திர மிஷனெரி ஆதரவுத் தொகைகளைக் கிரமமாக வழங்குதல்.

4. தங்களது திருச்சபையின் சார்பாக ஆலயமே இல்லாத பணித்தளத்தில் ஓர் ஆலயம் கட்டித் தருதல்

5. இளைஞர்கள் தனிமனித ஆத்தும ஆதாயத்தில் ஈடுபடவும், முழுநேரப் பணிக்கு அர்ப்பணிப்பதின் அவசியத்தை வலியுறுத்தி நற்செய்திப் பணியில் பங்குபெற ஊக்கமூட்டுதல்.

பிரியமானவர்களே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் 'இறுதிக் கட்டளையை' சிரமேற்கொண்டு நிறைவேற்றிட, பரிசுத்தாவியானவர் உங்கள் உள்ளத்தில் பாரம் கொடுத்தால், எங்களுடன் தொடர்புகொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

**புதிய எஸ்றாக்கள் அறியப்படாத கிராமங்களை நோக்கிப் புறப்பட்டனர்:**

தேவ தயவால் குஜராத் மற்றும் ஆந்திரப் பிரதேசப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியை முடித்து 45 இளம் ஊழியர்கள் 225 புதிய கிராமங்களை நோக்கிப் புறப்பட்டுள்ளனர். அவர்களது ஊழியக் கிராமங்களைப் பொறுப்பெடுத்து மாதம் ரூ.4000/- கொடுக்கும் விசுவாசக் குடும்பங்கள், திருச்சபைகள் தேவை. அடுத்த கட்டமாக ஒடிசா, வட இந்தியா, வடகிழக்கு மாநிலங்களில் எஸ்றா பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட ஜெபியுங்கள்.

**விஷ்வவாணி சிறுவர் விடுமுறை வேதாகம வகுப்புகள்:**

3277 ஆராதனைக் குழுக்களில் ஞாயிறுதோறும் பங்கெடுக்கும் 26,504 சிறுவர் சிறுமியருக்கு இவ்வாண்டும் வேனிற்கால வேதாகம வகுப்புகள் நடத்துகிறோம். பாடப் புத்தகம், எழுதுபொருள், உணவு வழங்க ஒரு நபருக்கு ரூ.150/- வீதம் ரூ. 40 இலட்சம் தேவை. இச்சிறியோரின் ஊழியத்தில் உங்கள் பங்கை தயவாய் செலுத்துங்கள்.

**பாராளுமன்றத் தேர்தல்:**

ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றவிருக்கும் விசுவாசிகளாகிய நம்முடைய ஜெபங்களெல்லாம் யோசேப்பின் இருதயம் கொண்டவர்களை தேசத்தின் தலைவர்களாக தேவன் தரவேண்டும் என்பதே. மொர்தெகாய், எஸ்தரின் ஜெபங்களை கேட்ட பரலோக தேவன் தமது ஆதீனத்திலிருந்து தமது திருவுளச் சித்தத்தை நிச்சயமாகவே நிறைவேற்றுவார். உபவாசித்து ஜெபித்தும், கண்ணீர் சிந்தியும் தேவ பர்வதம் காத்திருக்கும் நாம் ஜுன் 4 அன்று வெளிவரும் தேர்தல் முடிவுகளுக்காகவும் தொடர்ந்து ஜெபிப்போமாக.

**வாழ்த்துக்களும் நன்றிகளும்:**

1. விஷ்வவாணியின் திருப்பணிகளுக்காக ஜெபிக்கும், கொடுக்கும் உழைக்கும் அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும் உரித்தாகுக.

2. திருச்சபைகளில் லெந்துகால சிறப்புக்கூட்டங்கள் நடத்தவும், ஆராதனைகளில் செய்திகள் வழங்கவும் வாய்ப்பளித்த அனைத்து திருச்சபை போதகர்கள், தலைவர்கள், உடன் பிரதிநிதிகள், ஊழியர்களுக்கு மிகுந்த நன்றிகூறுகிறேன்.

3. ஆலய, அலுவலக கட்டுமானப் பணிகளுக்கும், ஊழிய சார்புத் தேவைகளுக்கும் உதாரத்துவக் காணிக்கைகள் வழங்கிய அனைவருக்கும் நன்றிசெலுத்துகிறேன்.

கர்த்தர் உங்களைப் பலமடங்கு ஆசீர்வதிப்பாராக. தொடர்ந்து ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று,
பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும்,
பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின. (அப்போஸ்தலர் 9:31)

12.04.2024 — கர்த்தரின் பணியில் உங்கள் சகோதரன்
சென்னை-53 — Rev. Dr. W. வில்சன் ஞானக்குமார்

# கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தில் நடுகிறவர் முக்கியமானவர்கள், நீர்ப்பாய்ச்சுகிறவர் மிக முக்கியமானவர்கள், விளையச்செய்கிறவரோ அதிமுக்கியமானவர்!

அன்பிற்குரியவர்களே,
இந்த எழுத்துக்களை வாசிக்க மனம் உவந்த உங்களுக்கு நன்றிகூறுகிறேன்.
கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் மனம் மகிழ்கின்றவராக,
அவரது நற்செய்தியை எண்திசையினரும் கேட்கவும், ஏற்கவும் வேண்டும்
என்பதில் மனம் பதித்தவராக உங்களை கருதி,
மேற்கண்ட தலையங்கத்தில்
கர்த்தருடைய வசனத்தை முன்னிட்டு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம்
மனித வாழ்விற்கு அவசியமானது, அர்த்தம் உள்ளது, ஆசீர்வாதமானது என்பதை
அறிந்தவர்கள் அவரை அறிவிக்கின்றவர்களாகவும் மாறுவார்கள்!
அவ்விதம் அறிவிக்கின்றவர்களை பரிசுத்த வேதம் இரு பகுதியாகப் பிரிக்கின்றது:
ஒன்று – நடுகிறவர்கள் – அவர்கள் முக்கியமானவர்கள்!
மற்றொன்று – நீர்ப்பாய்ச்சுகிறவர்கள் – அவர்கள் மிக முக்கியமானவர்கள்!

### ஆம், சுவிசேஷ ஊழியத்தில் நடுகிறவர் முக்கியமானவர்கள்!

முக்கியமானவர்கள் என்பது என்ன?
முக்கியமானதற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் யாரோ,
அவர்கள் கர்த்தருடைய பார்வையில் முக்கியத்துவம் பெறுகிறார்கள் என்பதே!

“நான் நட்டேன்” (1கொரி. 3:6) என்று பவுல் கூறும்பொழுது
சுவிசேஷ ஊழியத்தில் கர்த்தர் தனக்குத் தந்த பங்கு “நடுதல்” என்பதைத்
தெளிவாகத் தெரிந்திருந்தார்!
பவுல் தமக்கு எவ்வளவு முக்கியமானவர் என்பதையும் (அப். 9:15,16)
கர்த்தர் தெரிவித்தார்!
முக்கியமானவர்களின் நாவில் முக்கியமான செய்தி ஒன்று உண்டு!

செய்தி என்ன?
“மனிதன் ஓர் பாவி, அவனுக்கு ஓர் இரட்சகர் தேவை,
அந்த இரட்சகர் இயேசு கிறிஸ்து” என்பதே அந்தச் செய்தி!
(Man is a sinner, he needs a Saviour, the Saviour is Jesus Christ)
மனுமக்கள் அனைவருக்கும் முக்கியமான இந்தச் செய்தி
உலகின் பார்வைக்கு முக்கியமானதாக தெரியாவிடினும்,
மனிதனை ‘பாவி’ என்று எப்படிக் கூறலாம் என்று பலருக்குக் கொதிப்பு வரினும்,
‘இயேசு’ ஒருவர் மட்டும்தான் இரட்சகரோ என்ற எரிச்சலும் வரினும்,
மனதில் கெட்ட எண்ணங்கள், வாயில் தாறுமாறுகள்,
பார்வையில் இச்சைகள், இதயத்தில் கபடுகள், நடத்தையில் தீயப் பழக்கங்கள்,
அந்தரங்க முறைகேடுகள் இருக்கும்வரை
மனிதன் தன்னை பரிசுத்தன், புனிதன் என்று கூறவே முடியாது!

அவனது மனச்சாட்சியே அவன் நெஞ்சைக் கிள்ளும்,
குற்றமுள்ள மனச்சாட்சியுள்ள அனைவரும் குற்றவாளிகளே, பாவிகளே!

– எல்லோரும் பாவம்செய்து, ஏகமாய்க் கெட்டார்கள்,
நல்லவன் என்று சொல்ல
ஒருவன்கூட உலகில் இல்லை! (ரோமர் 3:12) என்பதே வேதம்!

அத்துடன்,
பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்பதும் வேதம்!

இந்த இரகசியத்தை அறிந்தவர்கள்
இந்த வெளிப்படுத்துதலைப் பெற்றவர்கள்
கர்த்தருடைய கிரியைகளையும்
கர்த்தருடைய துதிகளையும் பிரஸ்தாபம்பண்ணுவோம் என்று
தேவையான இடங்களுக்கு கால் எடுத்து வைக்கிறார்கள்! (ஏசாயா 6:7)

"அழிவில்லாத வித்தை" குனிந்து, பணிந்து, யூதனுக்கு யூதனாக,
கிரேக்கருக்கு கிரேக்கராக மாறி நடுகின்றார்களே,
அவர்கள் முக்கியமானவர்கள்!
அவர்களை இந்த உலகம் உற்றுப் பார்ப்பதில்லை, பரவாயில்லை,
ஆனால் பரலோகத்திலிருந்து தேவ தூதர்கள்
அவர்களை உற்றுப்பார்க்கிறார்கள் (1 பேதுரு 1:12)

அவர்கள் ஆவியானவர் சொல்லும் இடங்களுக்கெல்லாம் சென்று,
வீடுகளையெல்லாம் தட்டி,
முகம் முகமாய் இன்றியமையாத செய்தியை எடுத்துரைக்கிறார்கள்!
காடுகள், மலைப்பகுதிகள், பாலைவனக் குடிகள், பட்டணவாசிகள்,
கிராமங்கள், தீவுகள் என்று
ஆவியானவர் காட்டும் இடங்களுக்கெல்லாம் விரைகிறார்கள்!
அவர்கள் கால நிலைகள், சீதோஷ்ண நிலைகளைப் பார்ப்பது இல்லை!
உணவு எப்படியோ என்று யோசிப்பதும் இல்லை!
கடைகள் உண்டோ, பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்கள் உண்டோ,
மருத்துவ வசதி உண்டோ,
சாலைகள், குடிதண்ணீர் வசதி உண்டோ என்று யோசிப்பதும் இல்லை!

ஏற்பார்களோ, எதிர்ப்பார்களோ என்று
சிந்தனையில் மனம் சிதறுவதும் இல்லை!
"நீ போ, நான் உன்னைத் தூரமாய் அனுப்புகிறேன்" (அப். 22:21) என்ற
ஆவியானவரின் சத்தம் கேட்டவுடன் தீவிரிக்கிறார்கள்!
ஆம், அவர்கள் நடுகிறார்கள்,
மனித இதயங்களைத் தொடுகிறார்கள் – எனவே
அவர்கள் முக்கியமானவர்கள்!
ஆரோனைப்போல அழைக்கப்பட்டவர்கள் – எனவே
அவர்கள் முக்கியமானவர்கள்!
ஏசாயாவைப்போல தேவ சத்தத்தைக் கேட்டவர்கள் – எனவே
அவர்கள் முக்கியமானவர்கள்!
பிரியமானவர்களே,
நடுவதற்குச் செல்கின்றவர்களில் அநேகர் இளைஞர்களே!

பன்னிரு சீஷர்களில்
பேதுரு தவிர்த்து மற்ற அனைவரும் முப்பது வயதிற்கு உட்பட்டவர்களே!
பெரிய படிப்பு எதுவும் படிக்காதவர்களே! பேதைகளே! – ஆனால்
அவர்களோ தேவாதி தேவனுக்கு முக்கியமானவர்கள்!

**சுவிசேஷ ஊழியத்தில் நீர்ப்பாய்ச்சுகிறவர் மிக முக்கியமானவர்கள்!**

அன்று (யாத். 17 : 8–13)
அமலேக்கியர் நடுவில் யோசுவா இஸ்ரவேல் ஜனத்தை நிலைநாட்டுகிறவனாக,
ஏன், மேசியாவின் வருகைக்கு விதை நடுகிறவனாக போர்க்களம் இறங்கினான்!
மோசே, ஆரோன், ஊர் என்ற மூவரும்
யோசுவாவிற்குத் தங்கள் கண்ணீரால் நீர்ப்பாய்ச்சுவதற்குச் சிகரம் ஏறினார்கள்!
யோசுவா முக்கியமானவன்,
ஆனால் அம்மூவருமோ அதிமுக்கியமானவர்களாகி விட்டார்கள்!
ஏன்?
அவர்கள் ஓங்கி நீர்ப்பாய்ச்சும்போது, யோசுவா ஓங்கி அடித்தான்,
அவர்கள் பின்தங்கும் வேளையில் யோசுவா பின்வாங்கினான்!

பவுல் நடுகிறவன் – முக்கியமானவன்!
அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சுகிறவன் – மிக முக்கியமானவன்!
'அப்பொல்லோ' என்ற பெயரின் பொருள்
அழிக்கிறவன் அல்லது உடைக்கிறவன் என்பதாகும்!
ஆனால் அவனை ஆவியானவர் பவுலுக்கு நீர்ப்பாய்ச்சுகிறவனாகக் கொடுத்தார்!
பவுல் சொன்ன சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருந்தது (2 பேதுரு 3:16)
எளிய நடையில் கடினமானவைகளை எடுத்துக் கூறக்கூடிய அப்பொல்லோ
பவுல் சென்ற இடங்களுக்குச் சென்று,
பவுலின் செய்திகளை விவரித்து விளக்கிக்கூறினான்!
பவுலை கேலிசெய்கிறவனாக, குறைத்துக் கூறுகிறவனாக, குற்றம்சாட்டுகிறவனாக,
ஒரு ஊழியத்தைக் கெடுத்து,
தன் ஊழியத்தை வளர்க்கிறவனாக
அப்பொல்லோ இல்லை என்பதையே பவுல் 1 கொரிந்தியர் 3:6ல் கூறினார்.
அப்பொல்லோ பயிர்களை அழிக்கிறவன் அல்ல,
தண்ணீர்விட்டு வளர்க்கிறவன் – எனவே மிகமுக்கியமானவன்!

- ஒரு யோசுவா நட,
  மூன்று பேர் நீர்ப்பாய்ச்சினார்கள்!

- ஒரு பவுல் நட, அப்பொல்லோ உட்பட
  முப்பதிற்கும் அதிகமான பேர் நீர்ப்பாய்ச்சினார்கள்!
  அவர்களில் ஒருசிலரை ரோமர் 16ம் அதிகாரத்தில் காண்கிறோம்!
  அத்தனை பேரும் மிக முக்கியமானவர்கள்!
  பெபேயாளோ, பிரிஸ்கில்லா – ஆக்கில்லா தம்பதிகளோ,
  மற்றும் அந்த அதிகாரத்தில் வரும் நபர்களோ
  பவுலுக்கு வேண்டியமட்டும் நீர்ப்பாய்ச்சினார்கள்!
  மிகவும் ஆதரவாக இருந்தார்கள்!
  பவுலின் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தையேக் கொடுத்தார்கள்! (ரோமர் 16:4)
  அவர்கள் மிக முக்கியமானவர்கள்!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தில்
நடுகிறவர்கள் முக்கியமானவர்கள்,
நீர்ப்பாய்ச்சுகிறவர்கள் மிக முக்கியமானவர்கள் – ஆனால்
**விளையச்செய்யும் தேவன் அதிமுக்கியமானவர்!**

“என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது” (யோவான் 15:5) என்று கூறினாரே – எனவே அவரே அதி முக்கியமானவர்!

“இயேசுவாலேயன்றி” வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை (அப். 4:12) அல்லவா! – எனவே அவரே அதி முக்கியமானவர்!

“நாங்கள் எங்கள் சுய சக்தியினாலாவது, சுய பக்தியினாலாவது” (அப். 3:12)
சப்பாணியை நடக்க வைத்தோமோ, இல்லவே இல்லை,
இயேசுவின் நாமமே இதைச் செய்தது என்கிறார்களே – எனவே
அவரே அதி முக்கியமானவர்!

“பூமியிலே பாவங்களை மன்னிக்கும் அதிகாரம்” (லூக்கா 5:24)
தமக்கு உண்டு என்று கர்த்தராகிய இயேசு கூறினாரே – எனவே
அவரே அதி முக்கியமானவர்!

உலகின் எந்த மனிதரும்
“சத்தியத்திற்கு எதிராக ஒன்றுமே செய்யக்கூடாது” (2கொரி. 13:8)
என்று பரலோகம் சொல்லிவிட்டதே – எனவே
அவரே அதி முக்கியமானவர்!

“கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்,
அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா”
என்று சங்கீதக்காரன் (127:1) கூறுகின்றாரே – எனவே
அவரே அதி முக்கியமானவர்!

“கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல,
தன் நடைகளை நடத்துவது,
நடக்கிறவனாலே ஆகிறதல்ல” (எரேமியா 10:23)
என்று பரலோகம் பிரகடனம் செய்துவிட்டதே – எனவே
கர்த்தாதி கர்த்தரே அதி முக்கியமானவர்!

“விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல,
இரங்குகிற தேவனாலேயாம்” (ரோமர் 9:16) என்று
பவுலே கூறிவிட்டாரே – எனவே இயேசுவே அதி முக்கியமானவர்!
இயேசுவின் பிதாவாகிய தேவனே அதி முக்கியமானவர்!
பிதாவிலும் குமாரனிலுமிருந்து புறப்பட்டுவரும்
பரிசுத்த ஆவியானவரே அதிமுக்கியமானவர்!
அவர் ஏசாவை வெறுத்தேன் என்றார், ஏன்?
யாக்கோபை சிநேகித்தேன் என்றார், ஏன்?

– யாக்கோபின் இருதயம் ஏசாவை விட முற்றிலும் வித்தியாசமானது!
எத்தனையோ தவறுகள் செய்திருந்தாலும்
யாக்கோபிற்கு
தேவனிடத்தில் கிட்டிச் சேரவேண்டும் என்ற ஆசையே பொங்கியது!
ஏசாவிடமோ அது இல்லவே இல்லை!

யாக்கோபு
தன் ஆசீர்வாதத்திற்குத்
தேவனிடத்தில் போராடினான்,
ஏசாவோ
தானே தனக்காகப் போராடினான்!

- கர்த்தர்
தயவுள்ளவனுக்குத் தயவுள்ளவர்!
உத்தமனுக்கு உத்தமர்!
புனிதனுக்குப் புனிதர்!
மாறுபாடுள்ளவனுக்கு
மாறுபடுகிறவர்!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்
சுவிசேஷ ஊழியத்தில்
நடுகிறவர்கள் யார்?
இருதயத்தை இயேசுவுக்கு
உயில் எழுதிக் கொடுத்தவர்களே!

நீர்ப்பாய்ச்சுகிறவர்கள் யார்?
சுவிசேஷம் அறிவிக்கிறவர்களை,
முழு நேர ஊழியர்களை,
குருமார்களை, போதகர்களை,
சுயாதீனப் பிரசங்கிமார்களை
மனமார நேசிக்கிறவர்களே,
போஷிக்கிறவர்களே!

இஸ்ரவேலின் கிராமங்களுக்காக
மனம் உடைந்த
தெபோராளுடன் சேர்ந்து
இந்தியாவின் கிராமங்களுக்காக
உள்ளம் நொறுங்குகிறவர்களே,
தத்தெடுக்கிறவர்களே!

பிரியமானவர்களே,
நீங்கள்
கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்
சுவிசேஷ ஊழியத்தில்
முக்கியமானவர்களாகவும்,
மிக முக்கியமானவர்களாகவும்
மாறிவிட்டால்
இயேசு கிறிஸ்து
உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும்
அதி முக்கியமானவராக மாறிவிடுவார்!
ஆசீர்வாதத்திற்கும் மேல் ஆசீர்வாதம்
என்பதே உங்கள் பங்காகும்,
ஆமென்.

## ஓர் பிரார்த்தனை

சர்வ வல்லமையுள்ள தேவனே,
சகலத்தையும் அறிந்தவரே,
சர்வத்தையும் தாங்குகிறவரே,
இந்தப் பூமியில் எங்களைப்போல்
இதுவரை எத்தனை தலைமுறைகள்
தோன்றி மறைந்தது என்பது தமக்கே தெரியும்,
இன்று இருக்கும் நாங்களும்
எத்தனை நாட்களுக்கு என்பதும்
தாம் ஒருவருக்கே தெரியும்!
எவன்மேல் பிரியமாக இருப்பேனோ
அவன்மேல் பிரியமாய் இருப்பேன்
என்றவரே
இந்த ஜெபத்தைப் படிக்கும்
எங்கள் ஒவ்வொருவர் மீதும்
பிரியமாக இருக்கவேண்டும் என்று
ஜெபிக்கிறோம்.
நாங்கள் எவ்வளவோ, எத்தனையோ
தவறுகள் செய்திருந்தாலும்
தயாளம் தரவேண்டும் என்று ஜெபிக்கிறோம்.
சரீரத்தில் நற்சுகம், திடகார்த்தம், தீர்க்காயுசு,
உழைப்பில் வெற்றி, ஏற்ற வரவு,
ஆத்துமாவில் பரிசுத்த ஆவியினால்
உண்டாகும் சந்தோஷம்,
ஆவியில் தம்முடன் களிகூரும் பாக்கியம்,
குடும்பத்தில் குழந்தை செல்வம்,
பிள்ளைகளின் ஒற்றுமை,
அவர்களின் ஆசீர்வதிக்கப்பட்ட வருங்காலம்,
எங்கள் வீடுகளைச் சுற்றி
தமது தூதர்களின் காவல்,
போகையிலும், வருகையிலும்
தமது திவ்விய பிரசன்னம், பாதுகாப்பு,
தமது சுவிசேஷத்தைப் பிரஸ்தாபிப்பதில்
நடுவதிலோ, நீர்ப்பாய்ச்சுவதிலோ
எங்களுக்கும் ஓர் பங்கு,
தமது வருகையில் தூதர்களின் மேளதாளம்
அத்தனையும் தந்து எங்களை,
எங்கள் குடும்பத்தின் அங்கத்தினர்களை,
தலைமுறைகளை
நீர் நடத்திச் செல்லவேண்டும் என்று,
மண்ணிலும் விண்ணிலும் அதிமுக்கியமான
இயேசுவின் நாமத்தில் கெஞ்சிக் கேட்கிறோம்
- ஆமென்!
ஜெபத்தைக் கேட்டதற்காக
அதிக நன்றி, ஸ்தோத்திரம்!

# அன்பின் பகிர்வுகள்...

விஷ்வவாணி – சமர்ப்பண் பத்திரிகையை மாதந்தோறும் பெற்று, கருத்தாய் வாசித்து, ஜெபிக்கும் அன்பு சகோதர சகோதரிகளுக்கு,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

அழகியதோர் இந்திய தேசத்தில் ஜம்மு முதல் கன்னியாகுமரி வரை, குஜராத்திலிருந்து மணிப்பூர் வரை இயேசுகிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் (அப். 5:31) அறிவிக்க விஷ்வவாணி பணிக்குத் தேவனளித்த உன்னத சிலாக்கியத்திற்காக தேவனைத் ஸதோத்திரிக்கிறேன்.

வட இந்தியாவின் தலை பாகமாயுள்ள ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், இமாச்சலப் பிரதேசம், உத்தராகாண்ட் மாநில ஊழியங்களைப் பற்றி இவ்விதழில் உங்களது ஜெபம், செயல்பாட்டிற்காகப் பகிர்ந்துகொள்கிறேன்.

**மாநிலங்கள் ஓர் கண்ணோட்டம்...**

மலைகள், பள்ளத்தாக்குகள், சமமெளிகள் நிறைந்ததும் நம் தேசத்தின் வடசுவராக அமைந்த ஜம்மு காஷ்மீரில் பாயும் ஜீலம், செனாப், ராவி ஆகிய நதிகளும், பனிப்பொழிவும் பெரும்பாலான இடங்களை பசுமையாகவே வைத்திருக்கிறது. 20 மாவட்டங்களும், 1 கோடியே 22 லட்சம் ஜனங்களும் கொண்ட இம்மாநிலத்தில் காஷ்மிரி, டோக்ரி, இந்தி, உருது ஆகிய அலுவலக மொழிகளுடன், கோஜ்ரி, பகடி, பஞ்சாபி, பதர்வஹி, சராசி, கோவார், ஷினால புருஷாஸ்கி, பட்டேரி ஆகிய பேச்சு மொழிகளும் பேசப்படுகின்றன. கடல் மட்டத்திலிருந்து 23,409 அடி உயரத்திலுள்ள 'நுன் குன்' எனும் சிகரங்களின் அமைவிடமும் இம்மாநிலத்தில்தான்.

இந்தியாவின் மலைகள் மேலமைந்த 13 மாநிலங்களுள் இமாச்சலப் பிரதேசம் ஒன்றாகும். இமாலயத்தின் மேற்குப் பகுதியிலுள்ள இம்மாநிலத்தின் 13 ஜில்லாக்களில் சுமார் 68 லட்சத்து 64 ஆயிரம் வசிக்கின்றனர். சிம்லாவை தலைநகராகக் கொண்டு, 20,934 கிராமங்களைப் பெற்று, இமாச்சலி, இந்தி, கினௌரி போன்ற மொழியினரை தன்னகம்கொண்ட இம்மாநிலத்தில் 86.06% பேர் கல்வியறிவு பெற்றுள்ளனர்.

இந்தியாவின் அதிக பரப்பளவுடைய மாநிலங்களுள் 19வது இடம்பிடிக்கும் பஞ்சாப் ஊடாக சிந்து நதியின் துணை நதிகளான சுட்லெஜ், பியாஸ், ராவி எனும் நதிகள் பாய்ந்து, தேசத்தின் உணவுக் களஞ்சியமாக முன்நிற்கிறது. 23 மாவட்டங்களுடன் சண்டிகாரைத் தலைநகராகக் கொண்டது. பஞ்சாபில் வசிக்கும் 2 கோடியே 77 லட்சம் ஜனத்தொகையில் 37.48% நகரங்களில், 62.52% கிராமங்களில் வாழ்கின்றனர். பஞ்சாபிலுள்ள கிராமங்களின் எண்ணிக்கை 13,087.

வட நிலம் எனப் பொருள்படும் உத்தராகாண்ட், கடுவால், குமாயுன் எனும் இருபெரும் பிராந்தியங்கள் கொண்டது. 17,033 கிராமங்கள் – 17 மாவட்டங்கள் – 1 கோடிக்கும் அதிகமான ஜனங்கள் உண்டு. நிலப்பரப்பில் 86% மலைகளும், 65% வனங்களும் சூழப்பட்டது. கலாச்சாரம், உணவுப் பழக்கவழக்கம், கால சூழ்நிலை, மொழி, பண்டிகை அநுசரிப்பு எனும் அனைத்திலும் தனித்துவம் பெற்றுத் திகழும் உத்தராகாண்ட், பொருளாதாரத்தில் வளர்ச்சியடைவதில் இந்தியாவிலேயே 2ம் இடத்தில் உள்ளது.

**ஊழியங்கள் ஓர் கண்ணோட்டம்...**

அந்தந்த மொழிபேசும் 320 முழுநேர ஊழியர்களையே நூற்றுக்கு நூறு சதவீதம் இந்நான்கு மாநிலங்களிலும் கர்த்தர் நம் தளங்களில் பயன்படுத்திவருகின்றார்.

| மாநிலம் | பணித்தளம் | ஊழியக் கிராமங்கள் | ஆராதனை குழுக்கள் | கட்டப்பட்ட ஆலயங்கள் | கட்டவேண்டிய ஆலயங்கள் |
|---|---|---|---|---|---|
| ஜம்மு காஷ்மீர் | 40 | 225 | 90 | 7 | 5 |
| இமாச்சலப் பிரதேசம் | 42 | 223 | 109 | 6 | 12 |
| பஞ்சாப் | 51 | 268 | 182 | 16 | 15 |
| உத்தராகாண்ட் | 40 | 210 | 68 | 5 | 5 |

விஷ்வவாணி ஊழியங்கள் இந்நான்கு மாநிலங்களிலும் சிறப்பான வளர்ச்சி பெற்றுவருகின்றது. நமது தரிசனத் திட்டத்தின்படி 8000 கிராமங்களில் பணிபுரிய 1600 முழுநேர ஊழியர்கள் தேவை. தற்சமயம் 320 ஊழியர் பணிபுரிகின்றனர்.

இந்நான்கு மாநில ஊழியங்களுக்கான நமது பிராந்திய அலுவலகம் பதான்கோட்டில் உள்ளது. பதான்கோட் மூன்று மாநிலங்களை தொடும் பகுதியில் உள்ளது. இவ்விடத்தில் ஊழியப்பயிற்சி நிலையம் தேவை. குறைந்தது ஒரு ஏக்கர் இடமும் சுமார் 5000 சதுர அடியில் பயிற்சி நிலையக் கட்டடம் தேவை. தேவகரத்திலிருந்து இதுவரை அச்சப்புவலசா (ஆ.பி.), தரங்கடா (ஒடிசா), நவபாடா (குஜராத்), லகட்வால் (மகாராஷ்டிரா), நவடோலி (ஜார்க்கண்டு), சுரேரி (உத்தரப்பிரதேசம்), சிலிகுரி (மே. வங்காளம்), விஷ்வவாணி காமி (திரிபுரா) ஆகிய 8 பயிற்சி வளாகங்களைத் தளங்கள் பெற்று, ஊழிய வளர்ச்சிக்குப் பேருதவிபுரிகின்றன. மேலும் ஊழியத்திற்காக ஜெபிப்போர், இணைந்து உழைப்போர் பணித்தளங்களுக்குச் செல்லும்போது தங்கி, இளைப்பாறவும் இவ்விடங்கள் பயனுள்ளதாக இருக்கிறது.



இந்நான்கு மாநில ஊழியங்களும் தென் தமிழக விசுவாசிகளின் மூலமாக தாங்கப் பட்டுவருகின்றது. இந்த நிதியாண்டில் கர்த்தருடைய கிருபையால் பதான்கோட் பயிற்சி நிலையம் கட்டி முடிக்க வேண்டும். நிலம் வாங்குவதற்கும், அது சம்பந்தமான செலவுகளுக்கும் ரூ. 50 இலட்சம், மற்றும் 5000 ச.அடி கட்டடம் கட்ட ரூ. 1 கோடி ஆக மொத்தம் ரூ. 1 கோடியே 50 லட்சம் தேவை.

நிலத்திற்கான தொகையை வட இந்திய விசுவாசிகள் மூலமாகவும் கட்டுமானத் தேவையைத் தென் தமிழக பணிப்பங்காளர்கள் மூலமாயும் பெற்று, இத்திட்டத்தை நிறைவேற்றப் பிரயாசப்படுகின்றோம். கர்த்தர் நிச்சயமாகவே வாய்க்கப்பண்ணுவார் என்பதை விசுவாசிக்கிறோம். இப்பயிற்சி நிலையம் வட இந்திய ஊழியர்களைப் பயிற்றுவிக்க, தென்னிந்திய விசுவாசிகள் பணித்தள விஜயங்களின்போது தங்கி பார்வையிட, ஜெப முகாம்கள் நடத்த மிகவும் உதவியாக இருக்கும். உங்களை அன்புடன் வேண்டிக்கொள்வது, இந்த பதான்கோட் பயிற்சி நிலையத்தில் உங்கள் பங்கு இருக்கும்படியாக, நிலத்திற்காக, கட்டடத்திற்காக உங்களால் இயன்ற அளவுகொடுத்து வட இந்திய ஊழிய வளர்ச்சிக்குக் கரங்கொடுங்கள்.

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு. பிலிப்பியர் 4:12

ஹைதராபாத்
13.04.2024

கர்த்தரின் பணியில் உங்கள் சகோதரன்
P. செல்வராஜ்,
Chairman, Vishwa Vani Network



# ஆண்டவரே, அரசாளுவீர்!

ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும் ஒருமுறை ஒற்றை விரல் புரட்சியாகத் தேர்தல்கள் வந்துபோகின்றன. நம் விரல்களில் வைக்கப்படும் மைக்கறை இரண்டு வாரங்களுக்குள் காணாமற்போனாலும் தேசத்தின் கறையோ காலம்காலமாக கழுவப்படாமலேயே கிடக்கின்றது. இந்த தேசத்தை ஆளும் பிதாமகன்கள் பெருவாரியான மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப தெரிவு செய்யப்பட்டாலும் பழகப்பழகப் புளிக்கும் பாலாகவே மாறுகிறார்கள். தாழச்சாயும் இத்தேசத்தை தாங்கிப்பிடிக்க வரும் தலைவனாகச் சித்தரிக்கப்படும் எல்லோருமே தேர்தல் நேரங்களில் தெய்வப் பிறவிகளாகவும், ஆட்சிக்காலம் முடிந்து அவர்கள் வீட்டுக்குச் செல்லும் பருவங்களில் வேண்டாதவர்களாகவும் பார்க்கப்படுகிறார்கள்.

தேர்தல்கள் வந்துபோகின்றன. ஆட்சிகள் மாறுகின்றன. ஆனால் காட்சிகள் கலையாமல் அப்படியே கட்டியாகி நிற்கின்றன. ஏழைகளுக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் எப்போதாவது சில நன்மைகள் வழங்கப்பட்டாலும் எப்போதும் அவர்கள் நடத்துகின்ற சாதாரண வாழ்க்கை கண்ணீர் நிறைந்ததாகவே இருக்கின்றது. அவர்களின் கைச்சேகரிப்பு பணங்கள் களவாடப்படுகின்றன. விதவிதமாக யோசித்து எப்படியெல்லாம் சுரண்டலாமோ அப்படியெல்லாம் அவர்கள் சுரண்டப்படுகிறார்கள். மறு பக்கம் பணக்காரர்கள் பெரும் பணக்காரர்களாகவும், பெரும் பணக்காரர்கள் உலகமகா பணக்காரர்களாகவும் உயர்ந்துகொண்டே போகிறார்கள். புன்னகைகளோடு அவர்கள் தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் பேட்டிகள் கொடுக்கும்போது இந்த தேசம் நகைக்கிறது. எந்தச் சமநிலையும் இல்லாமல் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் சீசா போல ஆடும்போது கவிழ்ந்து விடுமோ என்ற அச்சத்தையும் ஏற்படுத்திவிடுகிறது.

இந்தியாவோடு ஒப்பிட்டு பார்க்கும்போது, வளங்களில் குறைந்த ஜப்பான், இஸ்ரேல் போன்ற சிறிய நாடுகள் தங்கள் உழைப்பு, தொழில்நுட்பம், அறிவுத்திறன், நம்பிக்கை முதலியவைகளையே முதலீடாய் வைத்து உலகத்திற்கே வெற்றிப் பாடங்களை எடுக்கின்றன. அதே சமயம் உலகத்தின் பெரும் மனிதவளம், எக்கச்சக்கமான கனிம வளங்களுடன் தடையற்ற தண்ணீர் வளத்தையும் தன் தரைப்பரப்பில் முக்கால்வாசி வளமிக்க விவசாய நிலங்களையும் வைத்திருக்கும் இந்த தேசத்தில் இன்னும் கால்வாசி மக்கள் ஒரு நேர உணவோடு சோர்ந்துபோகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நமக்குத்தான் இரத்தக் கொதிப்பு வருகிறது.

இந்தியா எனும் பரந்த தேசம் பன்முக கலாச்சார முகங்கள் உடையது. ஒவ்வொரு எட்டு மணி நேரப் பயணங்களுக்குள்ளும் அது தன் மொழி - நிறம் - உணவு - கலாச்சாரம் - உடையை மாற்றிக்கொள்கிறது. ஒவ்வொரு நிலப்பரப்பிற்குள்ளும் வாழும் மக்களுக்கு ஏற்ற உணவும், உடையும்

உறைவிடமும் பாதுகாப்பும் நிச்சயமாக உறுதிசெய்யப்படும்போது மட்டுமே இந்தியா போன்ற வேற்றுமை நிறைந்த கலாச்சார நாடுகளில் ஒற்றுமையை நிலைநிறுத்தமுடியும். இதில் ஜாதி, மத வேற்றுமை புகுந்தால் ஒற்றுமை சின்னாபின்னமாகிவிடுகிறது.

எனவேதான் தேசத்திற்கு ஜனநாயகம் என்பது இரத்த ஓட்டம் போல முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அதிலும் அந்தந்தப் பிராந்திய சுதந்திரம் என்பது இதயம்போல செயல்பட வேண்டியதிருக்கிறது. இதில் சிறிது பிறழ்வு ஏற்பட்டால் ஜனத்துக்கு விரோதமாக ஜனமும் ஜாதிகளுக்கு விரோதமாக ஜாதிகளும் எழும்பி இந்நிலம் போர்க்களமாகிவிடுகிறது.

இதைப் புரிந்துகொண்ட நம் தேச மூத்த அரசியலாளர்கள் பெரும்பான்மை சிறுபான்மை சமூக வித்தியாசங்கள் இன்றி இத்தேசத்திற்கான சட்டங்களை வரைந்தார்கள். அந்தச் சட்டங்களின் உறுதியான பிடியிலேயே இந்தியா இன்னமும் நிம்மதி பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றது.

ஆனால் கடந்த 20 ஆண்டுகளில் இந்தியச் சூழலை எடுத்து பார்ப்போமே என்றால் அடித்தட்டில் கிடக்கும் ஒடுக்கப்பட்ட மக்களை கைதூக்கி விடுவதற்கான அத்தனை முயற்சிகளையும் வேரோடு பிடுங்கும் அநாகரீகமான செயல்களுக்கான விதைகள் சமூக விஷமிகளால் தூவப்பட்டிருப்பதை நம்மால் உணரமுடிகிறது. படிப்பிலோ அந்தஸ்திலோ ஜாதியிலோ பெருமையிலோ வித்தியாசங்களை பார்ப்பதற்கு இத்தேச மக்களை அது ஏதோ ஒருவிதத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ தூண்டிக்கொண்டே இருந்திருக்கின்றது.

இந்தியா என் தாய் நாடு; இந்தியர் யாவரும் என் உடன் பிறந்தோர் என்ற ஒப்பற்ற வாக்கியத்தை அது வலுவிழக்கச்செய்துகொண்டே வந்திருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் மதச்சார்புள்ள ஆட்சிமுறை ஏற்படுத்திய மனச்சங்கடங்களும் ஆறாத காயங்களும் எழுத்தில் எழுதமுடியாதவை. பெருவாரியாக வாழும் ஒரு சமூகத்திற்கான அனைத்து பாதுகாப்புகளையும் உறுதிசெய்து சிறுபான்மையினருக்கு அச்சத்தையும் சந்தேகங்களையும் நம்பிக்கையின்மையையும் அது ஏற்படுத்தி இருப்பதை அரசியல் நோக்கர்கள் மட்டுமல்ல, சாதாரண குடிமக்கள் வரை நன்கு உணர முடிகிறது.

ஏதோ ஒன்றைச் செய்து தகப்பனாகவோ தாயாகவோ தங்கள் கடமையை பிள்ளைகளுக்கு நிறைவேற்றத் துடிக்கும் சமுதாயத்தின் அடிப்படை மக்களின் வயிற்றெரிச்சலையும், கண்ணீரையும் அது வாங்கிக்கொண்டே இருந்திருக்கிறது. இனிவரும் காலங்களில் எனக்கோ அல்லது என் பிள்ளைகளுக்கோ நான் வாழுகின்ற நிலம் பாதுகாப்பானது அல்ல என்பதை உணரும் குடிமக்களின் எண்ணிக்கை நாள்தோறும் பெருகிக்கொண்டே போகிறது. இரத்தம் இரணம் பிணம் என மாறி மாறி வாட்ஸ் அப்பிலும், இன்ன பிற சமுதாய வலைத்தளங்களிலும் பார்த்துப்பார்த்து கண்களும் இருதயமும் கறைபட்டு போய்விட்டது.

இந்தக் காலகட்டத்தில்தான், தேர்தல் எனும் ஒரே நம்பிக்கை குடிமக்களின் கைவிரல் புரட்சியாக களம் இறங்குகிறது. ஆனால் அதிலும் நடக்கும் ஊழல்கள் ஜனநாயக படுகொலைகள், இருந்த இறுதி நம்பிக்கைகளையும் தொலைத்துப் போடுகிறது.

ஆட்சி மாறினால் காட்சி மாறும் என எதிர்பார்க்கும்போதெல்லாம் அது நடந்திட முடியாது அல்லது நடத்திட முடியாது என்பதையே முற்காலச் சரித்திரங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றது. கூட்டிக் கழித்துப் பார்த்தால் புதிய மாற்று அரசியல் வெற்றிபெற்று இத்தேசத்தின் காரியங்கள் சீர்ப்படுத்தப் பட்டாலும் அது நாம் விரும்பும் அடிப்படையான மாற்றமாக இருக்க வாய்ப்பில்லை. மீண்டும் மீண்டும் பீடமேறும் தலைமைத்துவத்தினால் முயற்சித்தும் செய்யமுடியாமற்போகக் காரணம் அநீதங்களுக்குள் மனித இருதயங்கள் உறைந்துவிட்டதால்! அனைத்து மனிதரது இருதயமும் செயல்பாடுகளும் சரிசெய்யப்படும்போது காட்சி மாறுவது உறுதி. பாவம் பெருத்துப்போன பெரும்நிலப்பரப்பு சுத்த ஜலம் தெளித்து கழுவப்பட்டால் அன்றி தேசம் சுத்தம்பண்ணப்படுவது கனவாகவே இருக்கும்.

சமுதாய மாற்றம் என்பது தனிமனித வாழ்வின் மாற்றங்களில் இருந்து தான் பிறக்கிறது. தனி ஒரு மனிதன் தன் வாழ்வின் கோட்டை நேர்மையானதாக வரையும்போது மாத்திரமே ஒரு சமுதாயம் மணமிக்கதாக மலரமுடியும். அந்த மாற்றம் இயேசு கிறிஸ்துவின் கல்வாரி அன்பிலிருந்து துவங்க வேண்டும் என்பது நமது இருதய வாஞ்சை மாத்திரமல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இதயவாஞ்சையும் நம் பிதாவினுடைய பேராவலுமாகும். இது சமுதாயங்கள், தேசங்களைப் பற்றிப்பிடிக்கும்போது மாத்திரமே இவ்வுலகம் அமைதிப் பூங்காவனமாகத் திகழமுடியும். பசியற்ற, போதைகள் அற்ற, வக்கிரங்களற்ற, ஆபாசங்கள் அற்ற, அன்பும் அமைதியும் தெறிக்கும் புதிய சமுதாயம் வளர முடியும். அது இல்லங்கள் தட்டப்பட்டு அங்கே இருக்கின்ற இதயங்களில் இயேசு என்னும் தீபம் ஏற்றப்பட்டால் மாத்திரமே சாத்தியப்படும்.

இந்த அமைதிப்பணி செய்வோர் மதமாற்றம் எனும் ஒற்றை வார்த்தை யினால் அவமதிக்கப்படும்போது - தண்டிக்கப்படும்போது, சிறையில் அடைத்து அவர்கள் உயிர்கள் பறிக்கப்படும்போது, நரகத்துக்குத் தப்பும் இறுதி வாய்ப்பும் பிசாசினால் தட்டிப் பறிக்கப்படுகிறது. பிசாசுக்கும் அவனது ராஜ்ஜியத்தின் ஆவிகளுக்கும் மிகுந்த எரிச்சலையும் கோபத்தையும் உண்டுபண்ணும் இச்சுவிசேஷப் பணி இவ்வுலகத்தின் ஆட்சியாளர்களால் தடைசெய்யப்படுவது புதியதல்ல. என்றாலும் உலகின் அதிக ஜனத்தொகை கொண்ட இத்துணைக்கண்டத்தை நாம் அளவுகடந்து நேசிப்பதாலும் தடை களை நீக்கிப்போடுகிறவர் இன்னும் நம்மில் கரிசனை கொள்ளுகிறபடியினா லும் துன்ப துயரமான நேரங்களிலும் அதை விடாமல் செய்துவருகிறோம்.

இனி இது என்னவாகும் என்பதை நாம் அறியோம். ஆனாலும் கர்த்தரின் கை குறுகவில்லை, சுவிசேஷத்தின் வாசலை அவர் சித்தம் இல்லாமல் அடைப்பதற்கு உலகத்திற்கு உரிமை இல்லை. ஆனாலும் காலங்கள்தோறும் சில நாடுகளை அவர் பூட்டியே வைத்திருக்கிறார் சுவிசேஷப் பணிக்கு. அதன் மர்மமும் இன்னும் விலகவில்லை. எதுவாயினும் ஆண்டவருடைய சித்தத்தின்படி இந்த தேசத்தில் அன்போடும் பண்போடும் அவரை எடுத்துச் சொல்ல பொறுப்பு பெற்றிருக்கிறோம். அந்த பொறுப்பில் இருந்து வலதுபுறமோ இடதுபுறமோ சாயாதபடிக்கு நேராய் நடப்பதற்கு ஆண்டவர் தாமே நம் அனைவருக்கும் உதவி செய்வாராக, ஆமென்.

- ஹாரிஸ் பிரேம், விஷ்வவாணி மீடியா

2023-2024ல்

# பணித்தளங்கள் பெற்ற ஆலயங்கள் 85

“இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டுவந்தார் (அப். 2:47). விஷ்வவாணி பணித்தளங்களில் இந்த ஜீவ வசனத்தை அனுபவமாய்க் காணும் நம் கண்கள் பாக்கியமுள்ளவைகள். பிறந்த தளச்சபைகள் நடுவில் கடந்த நிதியாண்டில் சராசரியாக ஏழு ஆலயங்கள் ஒவ்வொரு மாதமும் பிரதிஷ்டையாயின. கர்த்தர் செய்த மகத்துவங்களைக் காண 1,193 பணிப்பங்காளர்கள் தள வருகைபுரிந்தனர்; கண்டு கர்த்தருக்குள் களிகூர்ந்தனர்.

இந்நான்கு பக்கங்களில் புகைப்படங்களாக இடம்பெறும் 85 ஆலயங்களும் அதன்முன் கூடிநிற்கும் முதல் தலைமுறை விசுவாசிகளும் உங்கள் இருதயங்களைக் கிறிஸ்துவுக்குள் பூரிப்பாக்கட்டும்; இவ்வாலயங்கள் எழும்பத் தேவன் பயன்படுத்திய விசுவாசக் குடும்பங்களைப் பெரும் நன்மைகள் நிரப்பட்டும்; இன்றும் 129 பணித்தளங்களில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானப்பணிகளை நிறைவுசெய்வதில் உங்கள் உளமார்ந்த ஜெபங்களும், உதாரத்துவமான ஈகைகளும் பெரும்பங்கு வகிக்கட்டும்; பாரத பணித்தளங்களில் பெருகும் ஆத்துமாக்கள் - ஆலயங்கள் மூலம் அறுவடையின் எஜமானருக்கு மேலும் மேலும் ஸ்தோத்திரங்கள், துதிகள், கனம், கீர்த்தி, புகழ் பெருகட்டும்!


01 SURAPUVARIGUDEM, A.P. - 10.04.23



02 VENKAYAPALEM, A.P. - 12.04.23


03 VUYALAMADUGU, A.P. - 14.04.23


04 KULAPITA, ODISHA - 16.04.23



05 HARIHARPARA, WEST BENGAL - 16.04.23


06 SHEPUAMPA, GUJARAT - 16.04.23


07 BONDURU, A.P. - 23.04.23


08 RASIKARAJPUR, ODISHA - 28.04.23


09 PATARAPADA, ODISHA - 29.04.23


10 KHUNTIATOLA, ODISHA - 30.04.23


11 MANASING PARA, TRIPURA - 30.04.23


12 DUSPAIHA PARA, TRIPURA - 06.05.23


13 BHAGIRATH KAMI, TRIPURA - 07.05.23



14 CHINNA KONANGI, A.P. - 10.05.23
15 K. MOTIRAM, W. BENGAL - 12.05.23
16 FACTORY LINE, W. BENGAL - 21.05.23
17 KIDRIMAL, ODISHA - 21.05.23
18 KAMDA, JHARKHAND - 21.05.23
19 TARABHA, ODISHA - 27.05.23



20 BIRTA, JHARKHAND - 28.05.23
21 CHINATHOLUMANDA, A.P. - 28.05.23
22 ITIKA, ANDHRA PRADESH - 04.06.2023
23 LARIBADI, ODISHA - 06.06.23
24 BARAKOLI, ODISHA - 11.06.2023
25 GADDIVALASA, A.P. - 11.06.2023



26 KOTHABAGGAM, A.P. - 11.06.2023
27 SIPAEJU, ODISHA - 14.06.2023
28 SEMARIYA, CHHATTISGARH - 17.06.2023
29 PANDEYPUR, U. P. - 25.06.2023
30 PALIYAKHEDA, RAJASTHAN - 02.07.23
31 KOTHAVEEDHI, A.P. - 08.07.23



32 MAHAL TALWANDI, PUNJAB - 09.07.23
33 CHIROLINE, WEST BENGAL - 16.07.23
34 GENTUBEDA, ODISHA - 22.07.23
35 KUTHANGI, ANDHRA PRADESH - 25.07.23
36 SALIDANGUDA, A.P. - 30.07.2023
37 LATAPOTA, WEST BENGAL - 15.08.23



38 WARENG KAMI, TRIPURA - 03.09.23
39 MANIKRAI PARA, TRIPURA - 09.09.23
40 VANDUVA, A.P. - 17.09.23
41 FERSUABARI, ASSAM - 24.09.23
42 MAHASINGI, ODISHA - 24.09.23
43 IPPAMANUGUDA, A.P. - 24.09.23



44 RANMOCHAN, MAHARASHTRA - 25.09.23
45 RUNDIYA, GUJARAT - 25.09.23
46 SINGIJHORA, WEST BENGAL - 01.10.23
47 S. SIVARAMPURAM, A.P. - 01.10.23
48 PANDRIVALASA, A.P. - 01.10.23
49 BADAPADA, ODISHA - 15.10.23



50 BURRATHOGU, A.P. - 16.10.23
51 PULAKUNTA, A.P. - 22.10.2023
52 THALABIRADA, A.P. - 03.11.23
53 BASANTPUR, ODISHA - 05.11.23
54 ELISHAPURAM, A.P. - 05.11.23
55 DEBPARA, WEST BENGAL - 19.11.23



56 CHILALA, HIMACHAL PRADESH - 25.11.23
57 LAKHIGAON, ASSAM - 02.12.23
58 BABUBHANDA, ODISHA - 11.12.23
59 BUSAYAVALASA, A.P. - 12.12.23
60 VADDEPUTTU, A.P. - 15.12.23
61 GEENA, HIMACHAL PRADESH - 17.12.23



62 M.VENKATAPURAM, A.P. - 17.12.23
63 HOLONGTHAI KAMI, TRIPURA - 18.12.23
64 GUNNATHOTTAVALASA, A.P - 19.12.23
65 PATHARIYA, CHHATTISGARH -28.12.23
66 SCHOOLSAHI, ODISHA - 15.01.2024
67 HEMSUKLAPARA, TRIPURA - 15.01.24



68 GODEVALASA, A.P. - 27.01.24
69 SOINKHOLA PARA, TRIPURA - 28.01.24
70 KUNDABHANGA, ODISHA - 29.01.24
71 LINGAGUDA, ODISHA - 03.03.2024
72 PATADI, CHHATTISGARH - 10.03.2024
73 CHODARAYI, A.P. - 10.03.2024


74 BAGHUAPAL, ODISHA - 15.03.2024


75 LOGILI, A.P. - 18.03.2024


76 PONUGODU, TELANGANA - 20.03.2024


77 ELUMETA, ODISHA - 23.03.24


78 SAINDANIPADA, MAHARASHTRA - 23.03.24


79 Y.SRIRAMAPURAM, A.P. - 24.03.24


80 DOKRIPODOR, ODISHA - 24.03.2024


81 NAGAMMAGUDA, A.P. - 24.03.2024


82 GULTARE, MAHARASTHRA - 30.03.24


83 GADIPALLIVALASA, A.P. - 30.03.2024


84 SURYANAGARAM, A.P. - 31.03.2024


85 TOTTADI, A.P. - 31.03.2024

# விசுவாச முயற்சிகள்



இமாச்சலப் பிரதேசத்தின் குட்வால் கிராமத்தில், சமாதானமும் சந்தோஷமும் நிறைந்த ஒருகூட்ட சகோதரிகள் அமர்ந்திருந்ததைக் கண்டு, அவர்களது அகமகிழ்ச்சியின் காரணம் கேட்டேன். ''கர்த்தரின் வசனம்'' என்றார்கள். எல்லோருக்கும் இலவசமாய்க் கிட்டும் அந்த அனந்த சந்தோஷத்தை பெறும் விருப்பத்துடன் வேதபாட வகுப்பில் வந்து அமர்ந்தேன். தேவ அன்பு இயேசுவின் மூலம் என் உள்ளம் தொட்டது. என் பாவ பாரங்களைக் களைந்து, மறுபிறப்பின் நிச்சயத்தை என்னுள் தந்த இயேசு எத்தனை நல்லவர்! மனிதரின் ஆத்துமா மறுமையிலும் சுகித்து, பிழைத்து வாழ சுவிசேஷம் தனி மனிதர் அனைவருக்கும் எத்தனை அவசியம் என்பதை என் மனம் உணர்ந்தது; என் கணவரைக் கர்த்தர் தமக்குச் சொந்தமாக்க வேண்டுமே என வாஞ்சித்தேன்; உபவாசித்து ஜெபித்தேன்; என் நெடு நாள் ஜெபம் இயேசுவின் நாமத்தில் பதில்கண்டது.

நானும் என் வீட்டாரனைவரும் கர்த்தரையே சேவிக்கிறோம். ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், வேத தியான வேளைகள் என்று எங்களைக் குடும்பமாக அழைத்துச்செல்லும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். என் உறவினர்களும் நித்தியத்தில் பங்கடையவேண்டுமென்ற எங்கள் விசுவாச முயற்சிகளுக்காக ஜெபியுங்கள். - ஜோதி, புதிய விசுவாசி.

# முழுநேரப் பணிக்கு
## தேவ அழைப்பு பெற்றோர்
# தேவை

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்று, நற்செய்தி எட்டாத இடங்களைக் குறித்த தரிசனம் பெற்று, கிறிஸ்துவுக்காக முழுநேரமாக உழைக்கும் அழைப்பும் அர்ப்பணிப்பும் பெற்றோர் விஷ்வவாணி பணியின் ஊழியர் தெரிந்தெடுப்பு முகாமான 'எஸ்றா முகாமிற்கு' வரவேற்கப்படுகிறார்கள்.

முப்பது வயதுக்குட்பட்டவர்களாக, எந்தவொரு கிறிஸ்தவ அமைப்புகளிலும் இதுவரை பணிபுரிந்திராதவர்களாக, குறைந்தது பன்னிரண்டாம் வகுப்பு தேறியவர்களாக இந்தியாவின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் தரிசன விரிவாக்கப் பணிக்குத் தேவை.

***எஸ்றா முகாமில் பங்கேற்பதற்கான படிவம் பெற தொடர்புகொள்ளுங்கள்.***

நிர்வாக இயக்குநர், விஷ்வவாணி, 20, ராகுல் தெரு, திருமலைப் பிரியா நகர், புதூர், அம்பத்தூர், சென்னை – 600 053 Email: vishwavaninet@vishwavani.org, ✆ 9443127741, 044–26869200

## ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்



சென்னை – படேல் நகர் வட்டார தேவ ஊழியங்களுக்குப் பிரதிநிதியாகச் செயல்பட்டு வரும் திருமதி. டெய்ஸி இராஜ மாணிக்கம் அவர்களின் தாயார் திருமதி. தெய்வநாயகி (வயது 74) அவர்கள் 29.01.2024 அன்று தேவராஜ்யம் பிரவேசித்தார்கள்.



திருநெல்வேலி – ரஹ்மத் நகரில் நமது ஊழியங்களுக்கு மிகுந்த ஆதரவாயிருந்த திருமதி. ஜாய் டேனியல் தாமஸ் (வயது 72) அவர்கள் 16.03.2024 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள்.



சென்னை – காந்தி நகர் பகுதியின் நம் ஊழியப் பங்காளர் திருமதி. ஜோவன்னா சுரேஷ் அவர்களது தகப்பனார் திரு. R. செல்வராஜ் (வயது 85) அவர்கள் 04.04.2024 அன்று நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள்.

சகல ஆறுதலின் தேவன் அருளும் சமாதானம் இக்குடும்பங்களை நிரப்பவும், தேற்றவும் ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்.

## வேதமே வெளிச்சம்



என் பெயர் ஜான் பெக். சீடரின் பெயருடன் வாழ்ந்தாலும், இயேசுவுக்கும் எனக்கும் இருந்த இடைவெளி அதிகம். இதயம் விரும்பிய அனைத்தும் என் கரங்களை வந்தெட்டியது; ஆயினும், உலகத்தின் மாயைகளால் இழுப்புண்டு, மன இரைச்சலுக்கு ஆளானேன். ஜீவ தேவனைத் தேடும் முயற்சியில் இறங்கினேன். ஒன்று அல்ல, இரண்டு அல்ல, ஆண்டாண்டுகளாகத் தேடியும் ஏமாற்றங்களையே என் இதயம் சம்பாதித்தது!

சத்தீஸ்கடு மாநிலம், சலாய்நகர் பணித்தள ஊழியர் வழங்கிய உபதேசங்களைக் கேட்கும் ஓர் தருணம் என் நண்பர் வாயிலாக வந்தது. பரிசுத்த வாக்கியங்களை என் வாழ்வில் முதன்முறையாய்க் கேட்டேன். என் மனதிற்குள் தைத்துக்கொண்டிருந்த அனைத்துக் கேள்விகளுக்கும் பரிசுத்த வேதாகமத்தில் பிரதியுத்தரம் கண்டேன். இயேசு என்னும் நாமத்தில் வெளிச்சம் பெற்றேன். பரலோக தேவன் பூவுலக மனிதர் மனதில் தங்கும் அதிசயத்தை என் அனுபவத்திலிருந்து அறிவித்தும் வருகிறேன். வசனங்களின் ஜீவன் வாலிப உள்ளங்களை ஊடுருவி, உயிரோட்டம் கொடுக்க என் வருங்காலங்களை அர்ப்பணித்திருக்கிறேன், ஜெபியுங்கள். – ஜான் பெக், சத்தீஸ்கடு

## விஷ்வவாணி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

**அன்பின் தொடர்பு**
செவ்வாய்தோறும் காலை 5:30 – 6 மணி வரை
**சத்தியம் தொலைக்காட்சியில்**

**சீகரம் தொடும் புறாக்கள்**
வியாழன்தோறும் இரவு 8 – 8:30வரை
**நம்பிக்கை தொலைக்காட்சியில்**

# எது முக்கியம்?

## தொடங்குவதா? தொடருவதா? முடிப்பதா?

*- Rev. Dr. இம்மானுவேல் ஞானராஜ், இயக்குநர் - ஜெப ஒருங்கிணைப்பு*

இது ஒரு பட்டிமன்ற கேள்விபோல மூன்று அணிகள் நின்று விவாதித்து எது சிறந்தது என்று தம்தம் அணியின் குறிப்புகளைக் கொட்டுவதற்கல்ல; விதைப்பதா, வளர்ப்பதா, அறுப்பதா என்று விளக்கம் கேட்பதற்கும் அல்ல. சுவிசேஷப் பணி என்பது என்ன? அதை எவ்வாறு காணவேண்டும்? அதில் நம் பொறுப்பு என்ன? நம் பங்கு என்ன என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதே.

1 கொரி. 3ம் அதிகாரத்தில் பவுல் அப்போஸ்தலன் சுவிசேஷப் பணியில் தன் பங்கு என்ன? அதைத் தொடர்ந்து எடுத்துச்செல்பவர்கள் பங்கு என்ன என்பதையும் விவரித்துச் சொல்லுகிறார். அதன் காரணங்கள்: அன்று கொரிந்து திருச்சபையில் காணப்பட்ட பொறாமை, வாக்குவாதம், பேதங்கள் இவைகளே. அப்போஸ்தலனாகிய பவுல் சபையின் இந்தப் பெலவீனங்களை எப்படிக் கையாளுகிறார்? எப்படி அந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கொடுக்கிறார் என்பதைப் பாருங்கள். இன்றும் திருச்சபையில் பொறாமைகளும் வாக்குவாதங்களும் மிகுந்திருப்பதை மட்டுமல்ல, அதன் விளைவாய் சபையில் பிரிவினைகள் உருவாகி, சபைப் பிரிவுகள் அதிகரிப்பதையும் காண்கிறோமே. அதற்கான தீர்வை இந்த அதிகாரத்தில் பவுல் கொடுப்பதை கவனித்தால் நல்லது.

கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? என்று பவுல் 1 கொரி. 1:13ல் கூறியதை நினைவில் கொள்ளுங்கள். பிரிவினை உபதேசம் சபையின் வெளியே உள்ளவர்களுக்கல்ல. சபையின் அங்கமாகக் கிறிஸ்துவின் சரீரமாக இருக்கும் விசுவாசிகளுக்கும் தேவ ஊழியங்களுக்கும் மட்டுமே எச்சரிப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சுவிசேஷம் அறிவிப்பது நம்மேல் விழுந்த கடமை என்பது நமக்குத் தெரியும். அதை அறிவிப்பதினால் மேன்மைபாராட்ட ஒன்றும் இல்லையே. கர்த்தருக்கு ஊழியஞ்செய்வதினால் பெருமைப்பட்டுக்கொள்ள ஒன்றும் இல்லையே. அதில் சிறந்தவன் யார் என்ற பொறாமை தேவையில்லையே. அதைத்தான் பவுல், பிரிவினையின் ஆவியை உடைய கொரிந்து திருச்சபைக்கு எடுத்துக்கூறுகிறார். 1 கொரி. 3:5ஐ பாருங்கள். பவுல் யார்? அப்பொல்லா யார்? நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவான ஊழியக்காரர்தானே. 'நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச் செய்தார்' என்று 6ம் வசனத்தில் பவுல் கூறுகிறார். நடுவது என்றால் என்ன? நீர்ப்பாய்ச்சுதல் என்றால் என்ன? விளையச் செய்வது என்பதும் என்ன?

### நடுதல் என்றால் என்ன?

'விதைப்பும் அறுப்புமே பூமியின் மீதிலே மாறி மாறி வருமே' என்று ஆதி. 8:22ம் வசனத்தை ஆதாரமாகக் கொண்ட பாடல் நாம் அடிக்கடி நினைவுகூரும் ஒன்றல்லவா? விதைக்கிறோம் அல்லது நாற்று நடுகிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறியாத மக்களுக்கு மனிதனின் பாவத்தை மன்னிக்க, நம்மைத் தேவபிள்ளைகளாக மாற்ற இயேசு கிறிஸ்து வந்தார் என்று சுவிசேஷ வார்த்தையை அறிவிப்பதும், அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று அறிவிப்பதும் ஓர் தொடக்கம் மட்டுமே. இந்தத் தொடக்கப்பணி அவசியமா? மற்ற இரண்டு பணிகளைவிட மேலானதா என்று வாதிப்பதில் அர்த்தம் கிடையாது. சுவிசேஷம் அறிவிக்கப்படாமல் எப்படிக் கேள்விப்படுவார்கள்? கேள்விப்படாமல் எப்படி விசுவாசிப்பார்கள் என்பது ரோமர் 10:14ல் இருந்து நாம் புரிந்துகொள்ளும் உண்மையல்லவா?

ஆகையினால் விதைக்கப்படாமல், அறிவிக்கப்படாமல் எப்படி மக்கள் இயேசுவை அறிய முடியும்? ஆகையால் சுவிசேஷம் அறிவிக்கப்படுவது மிகமிக அவசியமானதொன்று.

இன்று சுவிசேஷம் என்பது அறிவிக்கப்பட்ட பகுதிகளிலேயே அதிகம் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இயேசுவை ஏற்றுக்கொண்ட அதாவது அறிந்த திருச்சபை மக்களுக்கே திரும்பத் திரும்ப இரட்சிப்பின் செய்தி அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கு மானால், அறிவிக்கப்படாத மக்கள் எப்பொழுது சுவிசேஷத்தைக் கேள்விப்படுவார்கள்? அவர்களுக்கு இயேசுவை விசுவாசித்து, பாவமன்னிப்பு பெற வாய்ப்பு எப்போது கொடுக்கப்படும். 'தெரிந்தவர் கூறாவிட்டால், தெரியாதோர் அறிவதெங்கே? என்று எமில் அண்ணன் அருமையாய்ப் பாடியுள்ளார்கள். 'அங்கே ஆயிரம், அறுவடை ஆயிரம், இங்கே இயேசுவே, அடியவர் ஆயத்தம்' என்று நாம் யாவரும் இன்று தீர்மானிப்போம்.

அப்புறமான இடங்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க விரும்பும் (2 கொரி. 10:16) பவுலைப் போல விதைக்கும் பணியில் நம்மை எவ்வளவு ஈடுபடுத்தியுள்ளோம் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்ப்போம். சரியான இடங்களில் விதைக்கிறோமா? அதாவது நாம் சுவிசேஷம் சொல்லும் இடங்கள் நல்ல நிலத்தைப் போல வசனத்தை ஏற்றுக்கொள்ள வாஞ்சையுள்ள இடமா, இல்லையா என்பதை அறிந்து செயல்படவேண்டும். ஆகையினால் இந்த விதைக்கும் பணியில் ஜெபம் அதிகம் அவசியமானது. நாம் எந்த ஆத்துமாவிற்குச் சுவிசேஷம் சொல்லவேண்டும் என்று விரும்புகிறோமோ அவர்களுக்காக, அந்தக் கிராமங்களுக்காகத் தொடர்ந்து ஜெபிக்கவேண்டும். பரிசுத்தாவியானவர் லீதியாளின் உள்ளத்தைத் திறந்ததுபோல் இருதயங்களைத் திறக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே விதைப்பின் ஊழியம் பூரணமாகும். பவுல் அறியப்படாத இடங்களில் வசனத்தை விதைத்தார்.

### நீர்ப்பாய்ச்சுதல் என்றால் என்ன?

எங்கு, யாருக்கு வசனத்தைச் சொல்கிறோம் எனத் தெரியாமலேயே இங்கும் அங்குமாக விதைத்துக்கொண்டே செல்வதும், அதன் மூலம் தாங்கள் ஏதோ ஆண்டவருக்காகச் செய்துவிட்டோம் என்ற ஆத்தும திருப்தியை உண்டாக்கிக்கொள்வதும் சரியான ஊழியம் அல்ல, சரியான விதைப்பும் அல்ல. அப்படிச் செய்வதனால் விதைப்புப் பணியைத் தொடர்ந்து செய்யவேண்டிய பின்தொடர் பணி செய்ய இயலாமற்போய்விடுகிறது.

விஷ்வவாணி ஊழியத்திலே ஐந்து கிராமங்களுக்கு ஓர் ஊழியனாகப் பணி அமர்த்தப்படும் நமது தள ஊழியர் செய்வதைக் கவனித்துப் பாருங்கள். தனக்குக் குறிக்கப்பட்ட ஐந்து கிராமங்களிலும் வாரம் ஒருமுறை, குறிக்கப்பட்ட கிழமைகளில் சென்று தொடர்புகளை உருவாக்குகிறார். இது முதற்கட்டப் பணி. அப்படி தொடர்புகொண்ட - விருப்பம் உள்ளவர்களை ஒன்றுகூட்டி தேடுவோர் முகாம் நடத்தி, அவர்களை வாராந்திர வேதபாடக் கூடுகைக்கு அழைக்கிறார். அப்படி வேதபாட வகுப்புகளில் வருபவர்களுக்கு தொடர்ந்து வேத வசனங்களைக் கற்றுக்கொடுக்க வாய்ப்பு கிடைக்கிறது. இதுதான் நீர்ப்பாய்ச்சும் ஊழியம். வசனத்தை ஒருமுறை கேட்ட ஆத்துமாவுக்குப் பின்தொடர் ஊழியம் அத்யாவசியம். அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான். சுவிசேஷப் பணியில் அப்படி வேதபாட வகுப்புகளில் முறையாகப் பங்குகொள்ளுகிறவர்கள் இருதயத்தை இயேசுவுக்குத் திறந்து கொடுக்கவும், மறுபிறப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ளவும் வழிநடத்தப்படுகிறார்கள். அதைத் தொடர்ந்து அந்த புதிய விசுவாசியை திருமுழுக்குக்கு ஊழியர் ஆயத்தப்படுத்துகிறார். திருமுழுக்குப் பெற்றபின் ஆராதிக்கும் விசுவாசியாக, சபையின் அங்கமாக மாறிவிடுகிறார். இது நம் பணித்தளங்களில் இடம்பெறும் கிரமம்.

இந்தக் கிரமத்தை நாம் ஏன் நம் பகுதிகளில் பயன்படுத்தக்கூடாது. இயேசுவை அறியாத

நபர்களை நண்பர்களாக்குவதும் அவர்களுக்குத் தொடர்ந்து வசனத்தைப் பகிர்ந்து கொடுத்து, அவர்களை விசுவாசத்துக்கு நேராக நடத்துவதும் அதன்பின் திருமுழுக்குக்கு நேராக வழிநடத்துவதும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்புகள். பயன்படுத்துவோமானால் நாம் ஞானமுள்ளவர்கள். அப்பொல்லோ பவுல் விதைத்த இடங்களில் பின்தொடர் ஊழியத்தைச் செய்து நீர்ப்பாய்ச்சினான்.

### விளையச்செய்வது என்றால் என்ன?

'இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்" என்று அப். 2:47 கூறுகிறது. இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் என்று இயேசு மத்தேயு 16:16-18 வசனங்களில் சொன்னதுபோல, இயேசுவே கிறிஸ்து, நமது பாவங்களைச் சுமந்து தீர்த்த தேவாட்டுக்குட்டி, மனிதர்கள் இரட்சிக்கப்படுவதற்கு அதிகாரம் பெற்ற ஒரே நாமம் என்று விசுவாசிக்கின்ற ஒவ்வொரு மனிதனையும் பரிசுத்த ஆவியானவர் திருச்சபையிலே அங்கமாக்கி, தேவனுடைய பிள்ளையாக்கிவிடுகிறார். அந்த ஆத்தும ஆதாயமே விளையச் செய்தல். பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்தும் (யோவான் 16:8-11) பரிசுத்த ஆவியானவரின் பணியே விளையச் செய்யும் பணியின் முதற்கட்டம். இருதயத்தில் குத்தப்பட்டவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்வது (அப். 2:37,38) விளையச் செய்வதின் இரண்டாவது கட்டம். அப்படி விசுவாசித்தவர்கள் ஒருமனப்பட்டு ஆராதித்து, அப்பம் பிட்டு வசனத்தில் வளருவது மூன்றாவது கட்டம். அதையும் கடந்து ஆராதிக்கும் மக்கள் அறிவிக்க அர்ப்பணிப்பது (அப். 13:1-3), ஊழியர்களைப் பொறுப்பெடுத்து அனுப்புவது விளையச் செய்வதன் நான்காவது கட்டம்.

அந்தப் பரிசுத்தாவியானவர் நம்மையும் இந்தச் சுவிசேஷப் பணியில் அதிதீவிரத்துடன் முன்செல்ல ஆயத்தப்படுத்துவாராக. ■

## களங்களின் தேவை அழைக்கிறது!

கர்த்தருக்குள் அன்பார்ந்தவர்களே, களங்களின் தேவைகளைக் கண்ணோக்கிப் பாருங்கள்; வெகு அவசியமாயிருக்கும் கீழ்க்காணும் தேவைகளில் உங்கள் பங்கினை செலுத்த தயவாய் முன்வாருங்கள்.

உங்களது சிறுசிறு உதவிகளும் ஊழியர்களின் சுவிசேஷப் பணிகளுக்கு, குறிப்பாக கிராமங்கள் கர்த்தரை அறியும் அறிவுக்குள் வர பேருதவி புரியும்.

Rs. 500 வீதம் 5000 காக்பொராக் வேதாகமங்களுக்கு Rs. 25,00,000 தேவை
Rs. 6,000 வீதம் 225 சைக்கிள்களுக்கு Rs. 13,50,000 தேவை
Rs. 1000 வீதம் 660 இசைக்கருவிகளுக்கு Rs. 6,60,000 தேவை
Rs. 500 வீதம் 1300 தரைவிரிப்புகளுக்கு Rs. 6,50,000 தேவை
Rs. 200 வீதம் 600 இரவு விளக்குகளுக்கு Rs. 1,20,000 தேவை
Rs. 75,000 வீதம் 50 இருசக்கர வாகனங்களுக்கு Rs.37,50,000 தேவை
Rs. 25,000 வீதம் 200 ஒலிபெருக்கிச் சாதனங்களுக்கு Rs. 50,00,000 தேவை

### சமர்ப்பண் பத்திரிகைக்குச் சந்தா அனுப்புவதற்கான வங்கி விபரங்கள்

A/C Name: VISHWA VANI SAMARPAN
Bank: STATE BANK OF INDIA
A/C No.: **1040 845 3024**
IFSC Code: **SBIN0003870**
Branch: ANNANAGAR WEST, CHENNAI

இரசீது அனுப்புவதற்கு உதவியாக, தயவுகூர்ந்து தங்கள் முகவரியைத் தெரிவியுங்கள்.
✆ 044-26869200



# பணித்தளச் செய்திகள்

## ஸ்தோத்திரமும் வேண்டுதலும்

**கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார்; அவருடைய வலதுகரமும், அவருடைய பரிசுத்த புயமும் இரட்சிப்பை உண்டாக்கினது.**
சங்கீதம் 98:1

### 01 ஜம்மு காஷ்மீர் — ஆராதனைக் குழுக்கள்: 90

புத்வானி பணித்தளத்தில் 4 குடும்பங்கள் இயேசுவில் பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற்றுள்ளனர். விஜய்பூரில் இடம்பெற்ற விசுவாசிகளுக்கான இருநாள் முகாம் 180 பேருக்கு ஆவிக்குரிய பலனளித்தது. கங்காரியில் துவங்கிய ஊழியத்தினால் 5 பேர் இரட்சிப்பின் அனுபவம் பெற்றனர். பணிக்கெதிராய் செயல்பட்ட ரவி சங்கர் மனந்திரும்பி, விசுவாசிகள் ஐக்கியத்தில் பங்கெடுக்கிறார், துதியுங்கள்.

தல்சாரில் தேவ வசனங்கள் கேட்ட உள்ளங்களில் கர்த்தர் கிரியைசெய்ய... ஆலயப் பிரதிஷ்டைக்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபடும் தனோடி தள விசுவாசிகளுக்காக... சித்ரா, லட்டா ஆகிய இடங்களில் ஆலயக் கட்டுமானத்திற்கான நிலம் வாங்கப்பட... முழுநேரப் பணிக்கு முன்வந்துள்ள 10 இளைஞர்களுக்கு ஊழியப் பயிற்சி துவங்கப்பட ஜெபியுங்கள்.

### 02 இமாச்சலப் பிரதேசம் — ஆராதனைக் குழுக்கள்: 109

பாவ மன்னிப்பின் நிச்சயத்தை இயேசுவில் பெற்ற 9 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். பரோட் விசுவாசிகள் ஐக்கியத்தில் 3 குடும்பங்கள் புதிதாக இணைந்துள்ளன. தள ஆய்வுப் பணியின் மூலம் 10 புதிய கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. ஊழியர் அங்கித் குமார் குடும்பத்தைக் கர்ப்பத்தின் கனியினால் கர்த்தர் ஆசீர்வதித்தார், துதியுங்கள்.

தேடுவோர் கூட்டங்களில் வசனங்கேட்ட 180 பேரின் இரட்சிப்புக்காக... டோல் தளத்தில் நிலவும் ஊழியத் தடைகள் யாவும் தேவனால் நீங்க... பாங்ரான் ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக... ஊழியர்கள் பணிபுரியும் 223 கிராமங்களிலும் கர்த்தரின் சபை உதயமாக ஜெபியுங்கள்.

### 03 பஞ்சாப் — ஆராதனைக் குழுக்கள்: 182

கிறிஸ்துவுக்குள் தங்கள் புதிய வாழ்வைத் துவங்கிய 12 இளைஞர்கள் தேவ அன்புக்குச் சாட்சிபகருகின்றனர். 'இயேசுவே இரட்சகர்' எனத் தங்கள் புதிய விசுவாசத்தை 52 பேர் அறிக்கையிட்டனர். தெருப் பிரசங்கங்கள் வாயிலாகத் தொடப்பட்ட 50 குடும்பங்கள் விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைந்துள்ளனர். முழுநேர ஊழியத்திற்குத் தங்களைத் தத்தம்செய்துள்ள 20 இளைஞர்களுக்காகக் கர்த்தரைத் துதியுங்கள்.

15 கிராமங்களில் இடம்பெற்ற வாலிபர் முகாம்களின் பின்தொடர் பணிகளுக்காக... புஸ்மாண்டி தளத்தில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக... தேடுவோர் முகாம்கள் மூலம் இரட்சிப்பின் அனுபவம் பெற்ற 40 புதிய ஆத்துமாக்களும் தேவ வசனங்களில் ஸ்திரப்பட... ஜோகிந்தர் பால் என்பாரின் போதைப் பழக்கம் இயேசுவின் நாமத்தில் நிறுத்தப்பட ஜெபியுங்கள்.

### 04 உத்தராகாண்ட — ஆராதனைக் குழுக்கள்: 68

சுவிசேஷம் கேட்டவர்களுள் 74 பேர் இயேசுவைப் பின்பற்றத் தீர்மானம் செய்துள்ளனர். காட்டிமா பிராந்தியத்தில் பரிசுத்தாவியானவரால் உருவாகிய 11 புதிய ஆராதனைக் குழுக்களுக்காக ஸ்தோத்திரம். பயிற்சி-முதிர்ச்சி-வளர்ச்சி மையத்தில் 6 புதிய உறுப்பினர்களைக் கர்த்தர் இணைத்தார். பாவ அறிக்கை செய்த 79 பேர் கிறிஸ்துவில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கையிட்டனர், அல்லேலூயா!

தேடுவோர் முகாம்கள் வாயிலாக தேவனை விசுவாசிக்கும் 49 புதிய நபர்களும் தேவ அன்பில் நிலைக்க... விசுவாச அறிக்கை ஆராதனைக்கு ஆயத்தப்படும் 17 பேருக்காக... ஊழியர் சிவகுமாரின் ஊழியப் பிரயாசங்களால் ஆத்துமாக்கள் குணப்பட - ஆராதனைக் குழுக்கள் உதயமாக... காசநோயினால் அவதியுறும் ஊழியர் மனீஷ் குமாருக்கு இயேசுவின் தொடுதல் தேவை, ஜெபியுங்கள்.

### 05 ஹரியானா — ஆராதனைக் குழுக்கள்: 15

அசவார்பூர் கிராம ஊழியங்களுக்கு பிங்கி வீட்டார் சமாதானப் பாத்திரமாய்த் திகழ்கின்றனர். சிர்சா மாவட்டத்தின் ஒட்டன், பாம்பூர் பணித்தளங்களில் கர்த்தர் தந்துவரும் புதிய தொடர்புகளுக்காக ஸ்தோத்திரம். சேர்காட் தள விசுவாசிகள் ஐக்கியத்தில் மேலும் 2 குடும்பங்கள் இணைந்துள்ளன. போர்யகேரா கிராமத்தில் ரோகித் வீட்டாரனைவரும் கர்த்தரையே சேவிக்க அர்ப்பணித்துள்ளனர், துதியுங்கள்.

சோனிபட், ஃபடேகாபாத் ஆகிய ஜில்லாக்களில் தொடரும் தள ஆய்வுப் பணிகளுக்காக... ரஞ்சித் வீட்டார் நடுவில் நிலவும் சமாதானக் குறைவுகளைத் தேவன் அகற்ற... தண்ட் தள விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... கைதல், அம்பாலா ஆகிய பகுதிகளிலிருந்து முழுநேர ஊழியர்களைத் தேவன் எழுப்பித்தர ஜெபியுங்கள்.

### 06 டெல்லி — ஆராதனைக் குழுக்கள்: 6

பள்ளி செல்லும் சிறுவர் 72 பேருக்கு பை, புத்தகங்கள் கொடுத்து உதவ தேவன் தயை பாராட்டினார். கிறிஸ்துவில் பெலப்பட்டு வந்த 17 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். தேவ வசனங்களுக்குச் செவிசாய்த்த ரீனா மூலம் வீட்டாரனைவரும் மெய்யான சமாதானம் பெற்றுள்ளனர். சுனில், ஆஷா ஆகியோருக்குக் கர்த்தர் தந்த நற்சுகத்தினால் விசுவாசக் குடும்பங்களில் ஸ்தோத்திரங்கள் பெருகியது.

தளங்களில் இயங்கும் 6 ஆராதனைக் குழுக்களில் பங்கெடுக்கும் விசுவாசிகள் தங்கள் சாட்சியினால் அநேகரை நீதிக்குட்படுத்த... பிசாசின் அலைக்கழிப்புக்கு ஆளாகியுள்ள சரிதாவின் பூரண விடுதலைக்காக... 11 கிராமங்களில் தொடரும்

தேடுவோர் கூட்டங்களில் புதிய ஆத்துமாக்கள் பங்கெடுக்க... வேதபாட வகுப்புகளில் கலந்துகொள்ளும் 106 பேரும் கர்த்தரின் வசனங்களில் ஸ்திரப்பட ஜெபியுங்கள்.

**07 இராஜஸ்தான், பான்ஸ்வாடா பிராந்தியம் — ஆராதனைக் குழுக்கள்: 73**

கசர்வாடியில் பிசாசின் பிடியிலிருந்த கனா இயேசுவின் நாமத்தில் விடுதலை பெற்றார். மனநோயிலிருந்து சுகம்பெற்ற ஹீரா மூலம் சில்தியா கிராமத்தில் சுவிசேஷம் பரம்பிப் பலன்தந்தது. விசுவாசத்திற்குள் வந்த காத்து என்பாரின் கையின் பிரயாசங்கள் கர்த்தரால் ஆசீர்வாதம் காண்கிறது; குடும்பம் இரட்சிப்பின் அனுபவம் பெற்றது. 16 பேர் கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்துள்ளனர், துதியுங்கள்.

மாவட்ட அளவிலான முகாம்கள் மூலம் கர்த்தரின் வார்த்தைகள் மேலும் புதிய குடும்பங்களைச் சென்றடைய... பாகிதோரா தாலுகாவின் உள்ளான கிராமங்களுக்கு ஊழியர்கள் இன்னும் தேவை... பான்ஸ்வாடா பிராந்தியத்தில் ஊழியர்கள் பணிபுரியும் 233 கிராமங்களிலும் ஜனங்கள் வாழ்வாதாரத்தில் மேலோங்க... கனோடா பகுதியிலிருந்து கர்த்தர் முழுநேர ஊழியர்களை எழுப்பித் தர ஜெபியுங்கள்.

**08 இராஜஸ்தான் – உதய்ப்பூர் பிராந்தியம் — ஆராதனைக் குழுக்கள்: 54**

காணாமற்போன மனிஷா இரு வருடங்களுக்குப் பின் ஜெபத்தினால் மீண்டும் இல்லம் சேர்ந்தார். இயேசுவில் மனமாற்றம் பெற்ற ஹேம்ராஜ், சம்பூலால் ஆகியோர் சுவிசேஷப் பணியில் தன்னார்வ ஈடுபாடு கொண்டுள்ளனர். மனநோயிலிருந்த மரியம், சதன் கர்த்தரால் மறுவாழ்வு பெற்றுள்ளனர். 31 பேர் தங்கள் புதுவாழ்வைக் கிறிஸ்துவில் அறிக்கைசெய்துள்ளனர், துதியுங்கள்.

சியாத் பணித்தளத்தில் ஆலயக் கட்டுமானத்திற்கான அனுமதி ஆவணங்கள் கிடைக்கப்பெற... முழுநேர ஊழியத்திற்குத் தங்களைச் சமர்ப்பித்துள்ள 45 இளைஞர் களுக்கு வளாகப் பயிற்சி துவங்கப்பட... கோட்ரா பகுதியில் காணப்படும் அந்தகாரக் கிரியைகளைத் தேவன் அகற்ற... விசுவாச அறிக்கை ஆராதனைக்கான ஆயத்த வகுப்புகளில் பங்கெடுக்கும் 50 பேருக்காக ஜெபியுங்கள்.

**09 உத்தரப்பிரதேசம், லக்னோ பிராந்தியம் — ஆராதனைக் குழுக்கள்: 73**

மொகமத்பூரில் தேவாலயக் கட்டுமானப் பணி நிறைவடைந்தது. பரோலா தளத்தில் ஆலயம் கட்டுவதற்கான நிலத்தை விசுவாசிகள் ஆயத்தப்படுத்தி வருகின்றனர். மனோஜ் குமாரின் மனமாற்றத்தினால் கர்த்தருடைய ஊழியங்களுக்கு அநுகூல வாசல் திறக்கப்பட்டுள்ளது. புதிய விசுவாசி அனில் குமாரின் இல்லம் ரஜன்கடி கிராம விசுவாசிகளின் ஆராதனைக் கூடமானது. விஜீர்பூர்வாவில் சுவிசேஷத்தினால் தொடப்பட்ட 5 புதிய குடும்பங்களுக்காகத் தேவனைத் துதியுங்கள்.

பூஜா குடும்பத்தினர் கர்ப்பத்தின் கனியினால் ஆசீர்வதிக்கப்பட... கலுவா தள ஊழியங் களுக்கு எதிராய்ச் செயல்படுவோரைத் தேவன் சந்திக்க... லால்பூரில் இடம் பெறவுள்ள விசுவாச அறிக்கை ஆராதனையின் ஆயத்தங்களுக்காக... சராய் கிராம விசுவாசிகளுக்கு ஆலயம் கட்டுவதற்கு ஏற்றதோர் நிலம் வாங்கப்பட ஜெபியுங்கள்.

**10 பீஹார் — ஆராதனைக் குழுக்கள்: 88**

ஜாமுய் ஜில்லாவில் 25 கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. 27 பேர் தங்கள் விசுவாசத்தை இயேசுவில் அறிக்கையிட்டு ஆராதனையில் இணைந்துள்ளனர். தேடுவோர் கூட்டங்கள் வாயிலாக 98 கிராமங்களில் தேவ அன்பு பகிர்ந்தளிக்கப்பட்டது. பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற்ற 20 புதிய ஆத்துமாக்களும் சுவிசேஷத்திற்குச் சாட்சிபகருகின்றனர், துதியுங்கள்.

முதன்முறையாய்ச் சுவிசேஷம் கேட்ட 305 பேரும் கிறிஸ்துவில் இரட்சிப்பின்

அனுபவம் பெற... சுய உதவிக் குழுக்கள் வாயிலாக கிராம ஜனங்களுக்குச் சேவை புரியும் திட்டங்களுக்காக... சுவிசேஷ ஊழியத்தில் முழுநேரமாய்ப் பணிபுரிய முன்வந்த 20 இளைஞர்களுக்கு ஊழியப் பயிற்சி துவங்கப்பட... விசுவாசிகள் அதிகரித்துள்ள 10 ஆராதனைக் குழுக்களுக்கு ஆலய நிலங்கள் வாங்க ஜெபியுங்கள்.

### 11 ஜார்க்கண்டு — ஆராதனைக் குழுக்கள்: 74

ஹரூப் தள ஊழியத்திற்கு எதிராய்ச் செயல்பட்ட ஜீத் ராம் தேவனால் தொடப்பட்டு, புது சிருஷ்டியானார்; ஆராதனையிலும் ஆர்வமுடன் பங்கெடுக்கிறார். கெனபித்தா கிராம விசுவாசிகளுக்கு விரோதமாய் எழும்பிய அனில் ஒராவனைச் சுவிசேஷம் சந்திந்தது, வேதபாட வகுப்பிலும் இணைத்தது. 63 பேர் 'இயேசுவே இரட்சகர்' எனத் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்துள்ளனர். கலெத் கிராமத்தில் வேதபாட வகுப்பு துவங்கத் தேவன் துணைபுரிந்தார், துதியுங்கள்.

மூளை இரத்தக் கசிவால் தன்னுணர்வின்றி மருத்துவமனையிலுள்ள ஊழியர் துலார் கெர்கட்டாவுக்கு தேவன் மறுவாழ்வு தர... மங்ரா கிராம ஊழியங்களுக்கு இன்னல் விளைவிப்போர் மனந்திரும்ப... பார்னோ தளத்தில் நிறைவடைந்த குடுக்-முண்டாரி விசுவாசிகளின் மேளாவில் பங்கேற்றோர் ஆத்துமாதாயப் பணியில் ஈடுபட... மதுபானங்களைக் காய்ச்சி விற்கும் சுலோச்சனா தேவியின் மன மாற்றத்திற்காக ஜெபியுங்கள்.

### 12 மேற்கு வங்காளம் – கொல்கத்தா பிராந்தியம் — ஆராதனைக் குழுக்கள்: 64

ஊழியர் சரோஜித் பிஸ்வாஸ் என்பாரின் தள ஊழியங்களுக்கு சைக்கிள் வழங்கிய விசுவாசக் குடும்பத்திற்காகத் தேவனைத் துதியுங்கள். கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை 11 பேர் அறிக்கைசெய்தனர். இளைஞன் ருதாம் மிர்சா இயேசுவில் பெற்ற சுகத்தைச் சாட்சியாகக் கூறிவருகிறார். 56 கிராமங்களில் தேடுவோர் கூட்டங்கள் வாயிலாகத் தேவன் தந்துள்ள புதிய தொடர்புகளுக்காக ஸ்தோத்திரம்!

41 விசுவாசக் குடும்பங்கள் கூடும் கஸ்பா ஆராதனைக் குழுவுக்கு ஆலய நிலம் வாங்கப்பட... முதன் முறையாகச் சுவிசேஷம் கேட்ட 337 பேரும் தேவ அன்பில் ஸ்திரப்பட... 6 வருடங்களாகக் கர்ப்பத்தின் கனிக்காகக் காத்திருக்கும் கௌதம் பாக் - அர்ப்பணா பாக் தம்பதியருக்காக... புர்துவான் பகுதியில் விசுவாச அறிக்கைக்கான ஆயத்த வகுப்புகளில் பங்கெடுக்கும் 10 பேருக்காக ஜெபியுங்கள்.

### 13 சிக்கிம் — ஆராதனைக் குழுக்கள்: 20

தாராப் தள விசுவாசிகளின் எண்ணிக்கை 122 ஆக உயர்ந்துள்ளது. சுவிசேஷம் கேட்டவர்களுள் 273 பேர் மீண்டும் தேவ வசனங்கள் கேட்க வாஞ்சை தெரிவித்துள்ளனர். கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட 25 பேர் ஆயத்தப்படுகின்றனர். நலக்தாங் தள விசுவாசிகள் ஐக்கியத்தில் மன்மாயா வீட்டாரைத் தேவன் இணைத்துள்ளார், துதியுங்கள்.

இரத்தப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள சுமன் ரசீலிக்கு இயேசுவின் தொடுதல் தேவை... சிஸ்னே, பெரீங் ஆகிய இடங்களில் விதைக்கப்பட்ட வசனங்கள் கிரியை செய்ய... கைஜாலே தள விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... சந்தோஷ் சுபா எனும் புதிய விசுவாசிக்கு விரோதமாய் எழும்புவோர் மனந்திரும்ப ஜெபியுங்கள்.

### 14 அசாம் — ஆராதனைக் குழுக்கள்: 29

லோபங்டோலா விசுவாசிகள் தாங்களாகவே தற்காலிக ஆராதனைக் கூடம் கட்டியெழுப்பியுள்ளனர். போடோ, ராஜ்பாங்சி ஜனங்கள் வசிக்கும் மொய்னாகுரி பகுதியில் வசனங்கள் செல்லும் அநுகூல வாசல் திறவுண்டது. பக்ரிங்கிரெங்தி தளத்தில் பிசாசின் பிடியிலிருந்த மெக்ரி இயேசுவின் நாமத்தில் விடுவிக்கப்பட்டார்.

ஹதிபுடா கிராமத்தில் முதன் முறையாகச் சுவிசேஷத்திற்கு 18 பேர் செவிசாய்த்தனர், துதியுங்கள்.

விசுவாச அறிக்கை ஆராதனைக்கான ஆயத்தங்களில் 36 பேர் ஈடுபட்டு வருகின்றனர். கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போன குசும், அபுவேல் ஆகிய இளைஞர்களின் மனந்திரும்புதலுக்காக... தேவப் பிள்ளைகளைத் திசைதிருப்பும் லோகிராமின் மனதில் தேவன் கிரியைசெய்ய... போதை வஸ்துக்களுக்கு அடிமையான டாரிதுரி கிராம ஜனங்களை மீட்கும் முயற்சிகளுக்காக ஜெபியுங்கள்.

**15 மணிப்பூர்** **ஆராதனைக் குழுக்கள்: 33**

இரில்பங் தளத்தில் உதய்சிங் வீட்டார் தங்கள் இல்லத்தை வேதபாட வகுப்புக்காகத் திறந்து தந்துள்ளனர். 5 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை இயேசுவில் அறிக்கை செய்தனர். ஆண்ட்ரோ அவாங் விசுவாசிகள் ஐக்கியத்தில் 3 புதிய அங்கத்தினர்களைக் கர்த்தர் இணைத்துள்ளார். 56 கிராமங்களில் தேடுவோர் முகாம்கள் இடம் பெற்றன; 151 பேர் கிறிஸ்துவைக் குறித்து மேலும் அறியும் ஆர்வங் கொண்டுள்ளனர்.

யும்னாம் குனோவ்-ல் தொடரும் சுவிசேஷக் கூடுகைகளில் தேவ ஆவியானவர் கிரியை செய்ய... வாழ்வாதாரத்தில் பின்தங்கி, வசிப்பிடங்களை இழந்து, அகதி முகாம்களிலுள்ள விசுவாசிகளின் குடும்பங்களுக்கு மறுவாழ்வைக் கர்த்தர் கொடுக்க... பணிக்கெதிராய் வரும் கஸ்தூரி மெய்தீ என்பாரைத் தேவன் சந்திக்க... விசுவாசத்தினிமித்தம் துன்பங்களை எதிர்கொள்ளும் கெய்னோ கிராம ஜனங்களுக்குத் தேவன் துணைநிற்க ஜெபியுங்கள்.

**16 திரிபுரா** **ஆராதனைக் குழுக்கள்: 133**

17 பேர் கிறிஸ்துவில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். ஹரூங்பாரா ஆராதனைக் குழுவில் சபிருங் வீட்டார் புதிதாகப் பங்கெடுக்கின்றனர். அசுத்த ஆவியின் அலைக்கழிப்பினின்று விடுதலையடைந்த மம்தா தெபர்மா இயேசுவுக்குச் சாட்சிபகருகிறார். சம்புராய்காமி தள ஊழியங்களில் தன்னார்வமாய்ப் பங்கெடுக்கும் பிபுல் தெபர்மா வீட்டாருக்காகத் தேவனைத் துதியுங்கள்.

ராம கிருஷ்ணா காமி எனுமிடத்தில் தொடரும் தேடுவோர் கூட்டங்கள் பலன் தர... புதிய விசுவாசி ஹிரன் சாட்சியின் மூலம் வீட்டாரனைவரும் இயேசுவை அறிந்துகொள்ள... விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகும் 67 பேருக்காக... ருதாய்காமி, சொர்துங்காமி ஆராதனைக் குழுவில் பங்கெடுப்போரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபியுங்கள்.

**17 ஒடிசா – கஜபதி, கஞ்சம் மாவட்டம்** **ஆராதனைக் குழுக்கள்: 127**

நொலசிங் தளத்தில் முதன் முறையாக நடத்தப்பட்ட மருத்துவ முகாம் 200 பேருக்குப் பயன் அளித்தது. அந்தாரியில் கர்த்தர் தந்த புதிய திருச்சபைக்காகத் தேவனைத் துதியுங்கள். கிறிஸ்து இயேசுவில் தங்கள் விசுவாசத்தை 24 பேர் அறிக்கை செய்துள்ளனர், அல்லேலூயா!

பத்ராபூர் தாலுகாவில் தளங்களைத் திறக்க 10 புதிய ஊழியர்களைத் தேவன் எழுப்பித் தர... எலுமெட்டா தளச் சபையார் மூலம் அண்டை கிராமங்கள் சுவிசேஷ வெளிச்சம் பெற... விசுவாச அறிக்கை ஆராதனைக்காக ஆயத்தப்படும் 273 பேருக்காக... அங்கேடா, கம்பரிசாஹி ஆகிய இடங்களில் வசனங்கேட்ட புதிய ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

**18 ஒடிசா – ஹோ, சந்தாலி பிராந்தியம்** **ஆராதனைக் குழுக்கள்: 78**

7 பணித்தளங்களில் நிறைவடைந்த உபவாசக் கூடுகைகளுக்குப் பின் கர்த்தரின் ஊழியங்கள் வர்த்திக்கிறது. நலபில்லா தளத்தில் காணப்பட்ட ஊழியத் தடைகளைத்

தேவன் வாய்ப்புகளாக மாற்றினார். 21 பேர் கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். புதிய ஆலயம் பெற்றுள்ள பகுவாபால் தள விசுவாசிகள் சுவிசேஷப் பணியில் ஆர்வங்கொண்டுள்ளனர், துதியுங்கள்.

காதிபகலி தளத்தில் நிறைவடைந்த விசுவாசிகள் மேளாவின் பின்தொடர் பணிகளுக்காக... விசுவாசிகள் அதிகரிக்கும் கரஞ்சியா ஆராதனைக் குழுவுக்கு ஆலய நிலம் வாங்கப்பட... ஹோ, சந்தாலி ஜனங்கள் நடுவில் இயங்கும் 201 வேதபாடக் குழுக்களும் ஆலயங்களாக மலர... '35 புதிய ஊழியர்கள்' எனும் இவ்வாண்டின் பணித் திட்டத்தைத் தேவன் தமது மகிமைக்காய் நிறைவேற்ற ஜெபியுங்கள்.

**19 ஒடிசா – கந்தமால் மாவட்டம் ஆராதனைக் குழுக்கள்: 53**

குகூர்கும்பா, ருஜாங்கி, பலியபாடா ஆகிய கிராமங்களில் வேதபாட நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஊழியர் விஜயகுமார் சேத்தி குடும்பத்தைக் கர்த்தர் கர்ப்பத்தின் கனியினால் ஆசீர்வதித்தார். மீனாக்ஷி பெஹராவை அலைக்கழித்த அசுத்த ஆவி இயேசுவின் நாமத்தில் துரத்தப்பட்டது. பாண்டுலி தளத்தில் ஆலயக் கட்டுமானத்திற்கான நிலம் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது, துதியுங்கள்.

3 பணித்தளங்களுக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் அவசியமாகுகிறது. புதிய அங்கத்தினர்களின் இணைதலால் சாலகுடா ஆலயம் விஸ்தரிக்கப்பட வேண்டியுள்ளது. கந்தமால் தள அலுவலகத்திற்கு கணினி, பிரிண்டர் தேவை. கஜூரிபாடா பிராந்தியத்தில் விதைக்கப்பட்ட வேத வசனங்கள் மிகுந்த பலன் தர ஜெபியுங்கள்.

**20 ஒடிசா – ராயகடா பிராந்தியம் ஆராதனைக் குழுக்கள்: 86**

கிறிஸ்துவில் தங்கள் வாழ்வைப் புதுப்பித்த 5 பேர் பெத்தகுடா தளச் சபையில் இணைந்தனர். ஜம்பகுடா கிராம ஊழியங்களில் நோமிதா குடும்பத்தினர் மூலம் புதிய தொடர்புகளைத் தேவன் தந்தார். இரவுக் கூட்டங்கள் வாயிலாக குப்ரிகுடாவில் விசுவாசிகளின் எண்ணிக்கை 60ஐ எட்டியது. கர்த்தரைப் பற்றும் விசுவாசத்தை அறிக்கைசெய்த 9 பேர் மூலம் சுவிசேஷம் பரம்பிப் பலன் தருகிறது, துதியுங்கள்.

சந்திராபூர் பிராந்திய ஊழியங்களில் கனிகள் பெருக... துகும் கிராமத்தில் நற்செய்திப் பணிகளுக்குத் தடைவிதிப்போரைத் தேவன் சந்திக்க... ஹல்லாம் தள ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக... சின்பூர், ஹீன்டலிஜூலி ஆகிய இடங்களில் வசனங்கேட்டோர் உள்ளங்கள் கிறிஸ்துவுக்குள் பெலப்பட ஜெபியுங்கள்.

**21 ஒடிசா – சம்பல்புரி பிராந்தியம் ஆராதனைக் குழுக்கள்: 60**

10 வருடங்களுக்குப் பின் குழந்தைப் பாக்கியம் பெற்ற ஹேனா நந்தா குடும்பத்தினர் இயேசுவுக்குச் சாட்சி பகருகின்றனர். தலபாடா தளச் சபைக்கு விசுவாசிகள் ஒலிபெருக்கிச் சாதனங்கள் வழங்கினர். ஊழியர் மணிகண்டா பாரிக் நடத்தும் உபவாச ஜெப முகாம்களைத் தொடர்ந்து எதிர்ப்புகள் தணிந்துள்ளது, புதிய தொடர்புகளும் கிடைத்துள்ளது. 3 வருடங்களாகப் பிசாசின் பிடியிலிருந்த சீமா ராணியை இயேசு விடுவித்து விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைத்தார், துதியுங்கள்.

ஊழியர் முகுந்தா சாகர் பணிபுரியும் 5 கிராமங்களிலும் ஊழியத்திற்கான அநுகூல வாசல் திறக்கப்பட... சந்திமுன்டா, ஜிங்கர்மால் தள விசுவாசிகள் தங்களுக்கு ஆலயம் கட்டப்பட ஜெபிக்கின்றனர். பர்காட் மாவட்டத்தின் உள்ளான கிராமங்களுக்கு சம்பல்புரி ஊழியர்கள் 20 பேர் தேவை. கொர்மேலி, பந்தபாடாவில் தொடரும் தேடுவோர் கூட்டங்களில் புதிய ஆத்துமாக்கள் பங்கெடுக்க ஜெபியுங்கள்.

**22 சத்தீஸ்கடு – சாம்பா பிராந்தியம் ஆராதனைக் குழுக்கள்: 73**

பெட்லா, மத்வராணி, துமர்னாரா ஆகிய 3 கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் உதயமாகியுள்ளன. ஊழியர் ரோகித் குமார் பாகல் குடும்பத்தைத் தேவன் குழந்தைப்

பாக்கியத்தால் ஆசீர்வதித்தார். தேடுவோர் கூட்டங்களின் பயனாக 692 பேர் வசனங்களை மேலும் கேட்பதற்கு விருப்பம் கொண்டுள்ளனர். கிறிஸ்து இயேசுவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்த 25 பேருக்காக ஸ்தோத்திரம்.

கங்கி எனுமிடத்தில் வேதபாட வகுப்பு துவங்கும் பிரயாசங்களுக்காக... 263 கிராமங்களில் கர்த்தர் தந்த ஊழியங்களை ஒருங்கிணைக்கும் ஊழிய ஒருங்கிணைப்பாளர்கள் 10 பேருக்கு இரு சக்கர வாகனங்கள் தேவை... போதை வஸ்துக்களுக்கு அடிமையாயுள்ள தேவ் சரண் என்பாரின் விடுதலைக்காக... பீன்சோ, சுகாக்பூர், டாங்பூடா பணித்தளங்களுக்குத் தேவாலயங்கள் தேவை, ஜெபியுங்கள்.

**23 மத்தியப் பிரதேசம்** **ஆராதனைக் குழுக்கள்: 76**

32 பேர் தங்கள் விசுவாசத்தை இயேசுவில் அறிக்கைசெய்தனர். ரேஹலி கிராமத்தில் ஹரி நாராயண் குடும்பத்தைச் சமாதானப் பாத்திரமாய்த் தேவன் தந்தார். பக்கவாதப் படுக்கையை விட்டு ஜெபத்தினால் எழுந்த அஜய் இயேசுவுக்குச் சாட்சிபகருகிறார். ஓராண்டு காலமாய் அசுத்த ஆவிகளின் போராட்டங்களில் சிக்கியிருந்த அனிதாவைத் தேவகரம் விடுவித்தது.

காசநோயுடைய சீமாவுக்கு இயேசுவின் தொடுதல் தேவை... திண்டோரி, மன்டலா மாவட்டங்களில் ஊழியங்களுக்கான அநுகூல வாசல் திறக்கப்பட... ஊழியக் கிராமங்களில் இயங்கும் 313 வேதபாட வகுப்புகளும் ஆராதனைக் குழுக்களாய் மலர... அனுராக், சந்தீப் ஆகிய புதிய விசுவாசிகளின் சாட்சியினால் வீட்டாரனை வரும் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வர ஜெபியுங்கள்.

**24 குஜராத் – சூரத் மாவட்டம்** **ஆராதனைக் குழுக்கள்: 66**

5 புதிய கிராமங்களில் ஊழியங்கள் துவங்கப்பட்டுள்ளன. கிறிஸ்துவின் நாமத்தில் விசுவாச அறிக்கை செய்த 12 கிராம விசுவாசிகளுக்காக ஸ்தோத்திரம். ஜகாலாவில் தேவாலயக் கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. சாரதா பேன் வீட்டாரில் 5 பேர் இயேசுவைச் சொந்த இரட்சகராக அங்கீகரித்துள்ளனர், துதியுங்கள்.

பல்தா, பலோட் ஆகிய இடங்களில் வசனங்கேட்டோர் உள்ளங்கள் புதிதாக... மனநோயுடைய திவ்யேஷ் பாய் என்பாரின் நற்சுகத்திற்காக... தத்வாடாவில் தேவ பணிகளுக்கு விரோதமாய்ச் செயல்படுவோரைத் தேவன் சந்திக்க... மோரிதா, ஜீனாமால்டா கிராமங்களில் தொடரும் தேடுவோர் கூட்டங்களின் மூலம் ஆத்துமாக்கள் குணப்பட ஜெபியுங்கள்.

**25 மகாராஷ்டிரா** **ஆராதனைக் குழுக்கள்: 85**

இயேசு கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை 35 பேர் அறிக்கைசெய்தனர். வினோத் பாட்டில், மங்கள் பாய் கலே ஆகியோர் புதிய ஏற்பாட்டு நூலை வாசிப்பதுடன் மேலும் கிறிஸ்துவை அறிவதில் ஆர்வங்கொண்டுள்ளனர். சுக்தி தள விசுவாசிகள் நடுவில் சுவிசேஷ வேலைக்கான வாஞ்சை அதிகரித்துள்ளது. நிவருத்தி, யஷ்வந்த் ஆகியோர் வேதபாட வகுப்பில் புதிய அங்கத்தினராய்ச் சேர்ந்துள்ளனர்.

துலே, நந்தூர்பார் மாவட்ட பீல் விசுவாசிகளுக்கு நடத்தப்படவுள்ள மேளாவின் ஆயத்தப்பணிகளுக்காக... பிசாசின் பிடியினால் அலைக்கழிக்கப்படும் தேவ்பாயின் விடுதலைக்காக... வசனங்களுக்குச் செவிசாய்க்கும் ஹிப்பார்கா தள ஜனங்கள் நடுவில் விசுவாசிகளின் எண்ணிக்கை உயர... விசுவாச அறிக்கைக்கான ஆயத்த வகுப்புகளில் பங்கெடுக்கும் 40 பேரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... ஜெபியுங்கள்.

**26 தெலுங்கானா – ஹனுமகொண்டா பிராந்தியம்** **ஆராதனைக் குழுக்கள்: 46**

பீம்பூர் தாலுகாவில் 10 கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. 4 பேர் கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். கொம்முகுடம் தளத்

தில் நிலவிய ஊழியத் தடைகள் விலகியது. வசன வாஞ்சை நிறைந்த குப்தி, பட்டுபள்ளி கிராம ஜனங்கள் மத்தியில் வேதபாட வகுப்பு துவங்கப்பட்டுள்ளது, துதியுங்கள்.

நிப்பனி எனுமிடத்தில் சுவிசேஷப் பணிக்கான அநுகூல வாசல் திறக்கப்பட... தாபா கிராம ஜனங்களுக்குச் சுகாதாரக் குடிநீர், சாலை வசதிகள் கிடைக்க... கோண்டி இனத்தவர் வசிக்கும் கிராமங்களில் ஊழியங்களை ஸ்திரப்படுத்த இரு சக்கர வாகனம் தேவை... தாடிஹத்னூர், கூட்டகுடம் ஆகிய ஆராதனைக் குழுக்களுக்கு ஆலய நிலங்கள் வாங்கப்பட ஜெபியுங்கள்.

**27 தெலுங்கானா – ஹைதராபாத் பிராந்தியம் ஆராதனைக் குழுக்கள்: 70**

மொல்கமாமிடியில் வேதபாட வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 3 பேர் தங்கள் புது வாழ்வைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கையிட்டனர். அச்சம்பேட் மண்டலத்தில் 5 கிராமங்கள் ஊழியத்திற்கென தெரிவுசெய்யப்பட்டன. இளைஞன் யோகன் முழுநேரப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துள்ளார், துதியுங்கள்.

40 விசுவாசிகள் கூடும் குடிசிந்தலபாவி ஆராதனைக் குழுவுக்கு ஆலய நிலம் வாங்கப்பட... நாராயணபுரம் பகுதி வாழ் ஜனங்கள் பில்லிசூனியம், போதை வஸ்துக் களினின்று விடுவிக்கப்பட... செஞ்சு ஜனங்கள் நடுவில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 5 மெகாபோன், 5 டோலக் தேவை... எதாதிரி, நாகர்கர்னூல் ஜில்லாக்களின் தங்களிலிருந்து முழுநேர ஊழியர்கள் எழும்ப ஜெபியுங்கள்.

**28 ஆந்திரப் பிரதேசம் – ஜாதாபு ஆராதனைக் குழுக்கள்: 92**

ஜாதாபு மேளாவின்போது 38 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். 8 கிராமங்களில் கர்த்தர் தந்த புதிய ஆராதனைக் குழுக்களுக்காக ஸ்தோத்திரம். பெத்தகர்ஜா விசுவாசிகள் ஐக்கியத்தில் 7 புதிய ஆத்துமாக்களைக் கர்த்தர் இணைத்தார். தோட்டடி தளத்தில் தேவன் தந்த புதிய ஆலயம், கிராம ஜனங்களுக்குச் சேவை நிலையமாய்த் திகழ்கிறது, துதியுங்கள்.

தும்பகொண்டா, பாலம் ஆகிய கிராமங்களில் சுவிசேஷப் பணிகளுக்கான அநுகூல வாசல் திறக்கப்பட... ரஸ்தாகுண்டுபை எனுமிடத்தில் ஊழிய ஒருங்கிணைப்பு மையம் அமைக்கும் திட்டத்தில் தேவ நடத்துதலுக்காக... 4 கிராமங்களில் நிறைவடைந்த நற்செய்தி மேளாக்களின் பின்தொடர் பணிகளுக்காக... மன்யம் மாவட்டத்தின் உள்ளான கிராமங்களுக்கு 35 ஊழியர்கள் தேவை, ஜெபியுங்கள்.

**29 ஆந்திரப் பிரதேசம்– சோரா பிராந்தியம் ஆராதனைக் குழுக்கள்: 237**

31 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கைசெய்தனர். ஸ்ரீகாகுளம் ஜில்லாவின் 6 கிராமங்களில் வேதபாட வகுப்புகள் புதிதாகத் துவங்கப் பட்டுள்ளன. புதிய ஆலயம் பெற்றுள்ள ஸ்ரீராம்புரம், சூர்யநகரம், நாகம்மகுடா ஆகிய தளங்களின் விசுவாசிகளுக்குச் சுவிசேஷப் பணியில் ஆர்வம் அதிகரித்துள்ளது. பார்னிகோட்டா, தொசுராடா பணித்தளங்களில் புதிய விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகக் காண்கிறோம், ஸ்தோத்திரம்.

கந்துருகாம் கிராம ஜனங்களுக்கு ஆரம்ப சுகாதார மையம் கட்டும் பிரயாசங் களுக்காக... கொண்டலேவிடியில் ஊழிய ஒருங்கிணைப்பு நிலையம் அமைப்பதில் தேவ நடத்துதலுக்காக... 3 கிராமங்களில் நிறைவடைந்த வாலிபர் முகாம்கள் மூலம் முழுநேர ஊழியர்களைக் கர்த்தர் எழுப்பித்தர... 19 பணித் தளங்களில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானத்தின் நிறைவு பணிகளுக்காக ஜெபியுங்கள்.

**30 ஆந்திரப் பிரதேசம் – விஜயவாடா பிராந்தியம் ஆராதனைக் குழுக்கள்: 16**

சுவிசேஷம் கேட்ட வெங்கடேஷ், மல்லையா ஆகியோர் இனி மது அருந்துவதில்லை எனத் தீர்மானித்துள்ளனர். காசநோயிலிருந்து சுகமடைந்த அன்னாலம்மாவின்

சாட்சி இயேசுவுக்கு மகிமைசேர்க்கிறது. செஞ்சு ஜனங்கள் நடுவில் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்ட 5 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். நடக்கமுடியா திருந்த போட்டய்யாவின் கால்களைக் கர்த்தர் குணமாக்கினார், துதியுங்கள்.

பொடேநாயக் தாண்டாவில் தொடரும் தேடுவோர் கூட்டங்கள் ஆத்துமாக்களைத் தர... பக்கவாதப் படுக்கையிலுள்ள போட்டண்ணாவின் நற்சுகத்திற்காக... யெர்ர குண்டகுடம் தள விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... விசுவாசிகள் அதிகரிக் கும் 4 ஆராதனைக் கூடங்களுக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் தேவை ஜெபியுங்கள்.

**31 கர்நாடகா** **ஆராதனைக் குழுக்கள்: 98**

செல்லக்கரே பணிமையத்தில் பயிற்சி நிலையக் கட்டுமானத்திற்கான அனுமதி கிடைக்கப் பெற்றோம். இரு வருடங்களாகப் போதை வஸ்துக்களுக்கு அடிமையாயிருந்த நாகராஜ் நற்செய்தியினால் தொடப்பட்டு, விசுவாசியானார். ராஜேஷ்வரில் இயங்கும் ஆராதனைக் குழுவில் ஓம்கார் குடும்பத்தினர் புதிதாய் இணைந்துள்ளனர். மொகலஹள்ளி, திவானிகே ஆகிய இடங்களில் விசுவாசிகளின் எண்ணிக்கை உயரக் காண்கிறோம், ஸ்தோத்திரம்.

பிறந்த குழந்தை இறந்த துயரத்திலுள்ள சுஜாதா குடும்பத்தின் ஆறுதலுக்காக... சித்தா புரா, உஜ்ஜினிபுரா கிராம விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... விசுவாசிகள் அதிகரிக்கும் ஜோகிஹத்தி ஆராதனைக் குழுவுக்கு ஆலய நிலம் வாங்கப்பட... கர்நாடகக் களங்களில் இயங்கும் 182 வேதபாட வகுப்புகளும் ஆராதனைக் குழுக்களாக மலர ஜெபியுங்கள்.

## விசுவாச எட்டுகள்



பத்தொன்பது வயது நிரம்பிய என் மனதுக்குள் வால வயதின் கனவுகளும், வருங்கால படிப்பு பற்றிய எண்ணங்களும் ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் அத்தனையையும் ஒரே நாளில் முறித்துப்போட்டது பக்கவாதம் என்ற பெரும் வியாதி. பணப் பற்றாக்குறைகள் நடுவில் என் தகப்பனார் ரூ. 70 ஆயிரம் வரை செலவுசெய்து, என் சுகம் திரும்பப் போராடியும் என் வியாதிப்படுக்கை மாறவில்லை.

மனிதரால் கூடாதது தேவனால் கூடும் என்பதை எங்களுக்குத் தெரிவிக்கத் தேவன்தாமே தூரத்து உறவினர் ஒருவரை எங்கள் இல்லம் அனுப்பினார். குஜராத் – பிப்லான் பணித்தள ஊழியரிடம் அழைத்துச் சென்று, இயேசுவின் நாமத்தில் இடம்பெறும் அற்புத, அடையாளங்களைக் கேட்க வைத்தார்; ஜெபங்கள் தொடர்ந்தன! இன்று நான் எழுந்து நிற்பதும், நடப்பதும் என்னால் அல்ல, என்னைத் தொட்ட இயேசு கிறிஸ்துவினால்! பணம் அல்ல, கிறிஸ்துவின் வார்த்தைகளில் மனம் என்றால் அற்புதங்களுக்கும் ஆரோக்கியத்திற்கும் தடையில்லை என்பதை அறிந்துகொண்ட என் அப்பாவும் இயேசுவுக்குத் தன் இதயம் திறந்திருக்கிறார். எங்கள் இல்லமும் சுவிசேஷ நிலையமாய்த் திகழ்கிறது. எங்கள் விசுவாச எட்டுகளில் கர்த்தர் இன்னும் திடம் தந்து, எங்கள் இளம்சபையில் இன்னும் ஏராளமான ஆத்துமாக்களை இணைப்பாராக. – ஹிரல்பேன் வசாவா, குஜராத்.


**உங்கள் அன்பின் ஈகையினை ஆன்லைனில் அனுப்புவதற்கான வங்கி விபரங்கள்**

Bank : State Bank of India
A/C No. : **1015 1750 252**
Branch : Amanjikarai, Chennai - India.
A/C Name: VISHWA VANI
IFS Code : **SBIN0003273**

UPI ID
vvadmin@sbi
UPI Name:
VISHWAVANI

இரசீது அனுப்புவதற்கு ஏதுவாக தங்கள் முகவரியைத் தயவாய்த் தெரிவியுங்கள்.
✆ 9443127741, 9940332294

## நடப்புச் செய்திகள்:

**2015**முதல் 2022வரையிலான காலங்களில் இந்தியாவில் காசநோய் 16% குறைந்தாலும், இது உலகளாவிய சரிவு 9%ஐ விட அதிகம் என்கிறது இந்தியக் காசநோய் பற்றிய ஆண்டு அறிக்கை.

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத் தகவலின்படி, கடந்த ஆண்டு 25.55 லட்சம் பேர் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்; உத்தரப்பிரதேசத்தில் அதிக காசநோய் பாதிப்புகள் பதிவாகியுள்ளன, அதைத் தொடர்ந்து பீகாரும் உள்ளது.

பரம வைத்தியரே, காசநோயினால் தாக்கம் கண்டவர்களைச் சுகப்படுத்தி, ஆயுட்காலத்தை அதிகரிக்கச் செய்யும்!

**143** நாடுகளில் எடுக்கப்பட்ட “உலக மகிழ்ச்சி அறிக்கை-2024” (World Happiness Report) படி, இந்தியா 126வது இடம் பிடித்துள்ளது. பாகிஸ்தான், லிபியா, ஈராக், பாலஸ்தீனம், நைஜர் உள்ளிட்ட பல நாடுகளுக்குப் பின்னால் உள்ளது. இந்தியா தனது குடிமக்களின் நல்வாழ்வின் பல்வேறு அம்சங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த தரவரிசை எடுத்துக்காட்டுகிறது.

அண்டை நாடுகளான சீனா 60வது இடத்தைப் பெற்றுள்ளது, அதைத் தொடர்ந்து நேபாளம் (93), பாகிஸ்தான் (108), மியான்மர் (118), இலங்கை (128), மற்றும் பங்களாதேஷ் (129) உள்ளன.

முதியோர் மக்கட் தொகையில் உலகளவில் 2வது இடத்திலுள்ள இந்தியாவில் 60வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் 14 கோடி பேர் உள்ளனர்.

கவலைகளிலும், கண்ணீரிலும் விழுந்து தத்தளிக்கும் ஜனம் பெருகிய எங்கள் தேசத்திற்குத் தேவனே மனமிரங்கும்!

உலக முழுதும் சுமார் 200 கோடி பேர் பாதுகாப்பான குடிநீர் இன்றி உள்ளனர். தரமற்ற தண்ணீரைப் பருகுவதால் சுகாதாரம் தொடர்பான நோய்கள் பிரதி ஆண்டும் 7.4 கோடி மக்களின் வாழ்நாட்களை குறைக்கிறது; சுத்தமான தண்ணீர் கிடைக்காததால் ஆண்டுக்கு 14 லட்சம் பேர் மரிக்கின்றனர் என்கிறது ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை,

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானரே, தரணியில் அனைவருக்கும் தரமான தண்ணீரைக் கொடுத்து, காப்பாற்றியருளும்!

**போது**மான உணவு கிடைக்காத அல்லது அடுத்த வேளை உணவு எங்கேயிருந்து கிடைக்கும் என்று வாழும் உலக ஜனங்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துவிட்டது!

கோவிட்-19 தொற்றுநோய்க்கு முன்னர் 14.9 கோடி ஜனங்கள்தான் இவ்வித கடினமான சூழ்நிலையில் இருந்தனர். ஆனால் 2023ல் 33.3 கோடி பேரை இக்கொடுமையான சூழல் ஆட்கொண்டுள்ளது.

5-அப்பம்; 2-மீன் கொண்டு 5000க்கும் அதிகமானோரை போஷித்த இயேசுவே, மீதியான 12 கூடைகளையும் கரங்களில் கொடுத்தவரே, பசி, பட்டினி களைந்தருளும்!

## விஷ்வவாணி ஊழிய விபரங்கட்கு தொடர்புகொள்ளுங்கள்

**தென் தமிழகம்:**

திருநெல்வேலி & தென்காசி:
✆ 9442006618. 18-B, டேனியல் தாமஸ் தெரு, பாளையங்கோட்டை-2.

நாகர்கோவில்: ✆94443-43180

தூத்துக்குடி: ✆ 96777-96052

**மத்திப தமிழகம்:** 29A, பிலிப்ஸ் கார்டன், பெத்தானி நகர், விளாச்சேரி ரோடு, பசுமலை, மதுரை-625004. ✆ 98653-52272.

திண்டுக்கல்: ✆ 97884-27036

விருதுநகர்: ✆ 96598-03075.

திருச்சி: 26A, எட்டுப் பட்டறை காம்பவுண்டு, திரு.வி.க. நகர், புத்தூர், திருச்சி-620017 ✆ 9488804685

தஞ்சாவூர்: ✆ 9443586692

**மேற்கு தமிழகம்:** கோயம்புத்தூர்:
45, அன்சாரி வீதி, ராம் நகர்,
கோயம்புத்தூர் - 641009 ✆9442006614.

சேலம்: ✆ 9789758300.

**வட தமிழகம்:**

சென்னை – கோடம்பாக்கம்:
15/8, முதல் தெரு, சுப்பராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை – 600024
✆ 90031-42572, ✆ 94446-87488

சென்னை-முகப்பேர்:
LIG 502, முகப்பேர் ஏரித் திட்டம்
8வது தெரு, முகப்பேர்,
சென்னை-600037. ✆ 9443004640.

சென்னை – வேளச்சேரி:
தேவா-சுசி இல்லம், 13/9,
7வது மெயின் ரோடு, தண்டீஸ்வரம் நகர்,
வேளச்சேரி, சென்னை-600042.
✆9600888375.

சென்னை – பெரும்பாக்கம்:
5/225-A வீரமா முனிவர் தெரு,
பசும்பொன் நகர், பெரும்பாக்கம்,
சென்னை-600100. ✆9003609874.

விழுப்புரம் & பாண்டிச்சேரி:
✆9443997515.

வேலூர்: 6, முதல் தெரு, கம்பன் நகர்,
அலமேலுமங்காபுரம்,
வேலூர் - 632009. ✆9600138998

# EVALUATION & PLANNING MEETINGS



முன்வரும் ஆறு மாத ஊழியங்களுக்கான

**திட்டக் கூடுகைகள் 2024**

தேவ கிருபையை முன்னிட்டு பத்து கேந்திரங்களில் இடம்பெற்ற திட்டக்கூடுகைகள் மூலம் ஊழியர்களின் ஐக்கியம் பெலப்பட்டது; தரிசனப் பாதையில் முன்நடப்பதற்கு ஏதுவாக முழங்கால்கள் ஸ்திரப்பட்டது; விசுவாசத்துடன் வரைந்த ஊழியத் திட்ட அறிக்கைகள் மூலம் அடுத்த ஆறு மாதங்கள் அறுவடையின் மாதங்களாகவே இருக்கும் என்பதில் திட நம்பிக்கையும் பிறந்தது! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.



லூதியானா (வட இந்தியா), 3-5 ஏப்ரல் 2024



கொச்சி (தமிழ்நாடு, கேரளா), 3-5 ஏப்ரல் 2024



பெங்களூரு (கர்நாடகா), 3-4 ஏப்ரல் 2024



விஜயவாடா (மத்திய ஆந்திரம்), 3-4 ஏப்ரல் 2024



லகட்வால் (மகாராஷ்டிரா, குஜராத்), 4-6 ஏப்ரல் 2024



ஹன்மகொண்டா (வட தெலுங்கானா), 5-6 ஏப்ரல் 2024



தரங்கடா (மே. வங்., ஒடிசா), 4-6 ஏப்ரல் 2024




கடப்பா (தென் ஆந்திரம்), 6-7 ஏப்ரல் 2024



சிலிகுரி (வடகிழக்கு மாகாணம்), 6-8 ஏப்ரல் 2024



ஹைதராபாத் (தென் தெலுங்கானா), 8-9 ஏப்ரல் 2024

RNI REGD. NO. RN. 45021/89 | POSTAL REGD. NO. HQ/SD/182/2024-2026 - TAMIL | DATE OF PUBLICATION 20.4.2024
LICENSED TO POST WITHOUT PREPAYMENT - PMG/TS/HQR/SC-02/WPP/2024-2026
Return Requested: VISHWAVANI SAMARPAN
1-10-28/247, Anandapuram, ECIL Post, Hyderabad-500062.

கண்ணீரோடே விதைக்கிறவர்களுக்குக் களங்கள்தோறும் கெம்பீர அறுவடை உண்டு;
விளையச்செய்கிற தேவனாலேயே உண்டு. அல்லேலூயா!



BAGHUAPAL, ODISHA - 15.03.2024



LOGILI, A.P. - 18.03.2024



PONUGODU, TELANGANA - 20.03.2024



ELUMETA, ODISHA - 23.03.2024



SAINDANIPADA, MAHARASHTRA - 23.03.2024



Y.SRIRAMAPURAM, A.P. - 24.03.2024



DOKRIPODOR, ODISHA - 24.03.2024



NAGAMMAGUDA, A.P. - 24.03.2024



GULTARE, MAHARASTHRA - 30.03.24



GADIPALLIVALASA, A.P. - 30.03.2024



SURYANAGARAM, A.P. - 31.03.2024



TOTTADI, A.P. - 31.03.2024

VISHWA VANI SAMARPAN - TAMIL LANGUAGE
Printed and Published by P. Selvaraj on behalf of VISHWA VANI, a registered society ( Regn. No.17871 of 1987) and printed at CAXTON Offset Pvt. Ltd., 11-5-416/3, Red Hills, HYD-04. and published at 1-10-28/247, Anandapuram, ECIL Post, HYD-62. POSTING DATE: 23.04.2024. EDITOR: P. SELVARAJ.